"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

தை - மாசி - பங்குனி 2012




பொங்கல் வாழ்த்துக்கள்

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

# VASAN

## PRINTERS LTD.

45 A, Crusoe Road, Mitcham, Surrey. CR4 3LJ

Tel : 020 8685 9203
Email : vasanprinters@gmail.com
Mobile : 07957 998 522



**We are Specialists in**

- Books & Magazines
- Posters
- Leaflets
- Business Cards
- Letter Heads
- Arangetram Brochure
- Wedding Cards

etc....



மணி 20

# கலசம்
# KALASAM

ஒலி 71

www.saivamunnettasangam.com

FREE ISSUE

## பெயர் என்ன?

**அ**ண்மையில் ஒரு நண்பரைச் சந்தித்தேன். அவருக்கு இரண்டு பெண் குழந்தைகள். மூத்த குழந்தையின் பெயர் நோரிணி. இரண்டாவது குழந்தையின் பெயர் சுவிசிணி. இந்தப் பெயர்கள் தமிழல்ல; வடமொழியும் அல்ல என்று புரிந்தது. ஆர்வ மேலீட்டால் அந்தப் பெயர்களுக்கு என்ன கருத்து என்று கேட்டேன். காரணம் அவர் ஒரு தமிழ்ப் பற்றாளர். அவர் சொன்ன பதில் திகைப்பை ஊட்டியது. அவர் நோர்வே நாட்டில் இருந்தபொழுது பிறந்ததால் மூத்த பெண்ணின் பெயர் நோரிணி. பின் அவர்கள் சுவிஸ் நாட்டுக்குக் குடிபெயர்ந்து வந்தபின் இரண்டாவது குழந்தை பிறந்தது. முதற் பெயர் போல 'ணி' யில் முடியவேண்டும் என்பதால் சுவிசிணி என்றார் அந்த நண்பர். அத்துடன் அவர் நிறுத்தவில்லை. ஏதோ ஓரிடத்திலுள்ள அம்பாளின் பெயரென்று யாரோ அவருக்குச் சொன்னார்களாம்!!

**பெயரைத் தேடும்போது கவனிக்கப்படும் விடயங்கள்: 1. மேற்கு நாட்டுக்காரர்கள் இலகுவாகச் சொல்லக்கூடிய பெயராக இருக்கவேண்டும். 2. ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் இருக்கும்போது பெயர் ஒரேமாதிரி முடியவேண்டும். 3. எண் சோதிடத்தில் நம்பிக்கை இருந்தால் அதற்கும் பொருந்தவேண்டும். 4. நட்சத்திரத்துக்குப் பொருத்தமான எழுத்தில் வரவேண்டும். இவைதான் புலம் பெயர்ந்து வாழும் சில தமிழர்களிடை நாம் காணும் விடயம். பஞ்சாங்கத்தின்படி ஆயிலிய நட்சத்திரத்தில் பிறந்தால் டி, டு, டே, டோ என்ற எழுத்துக்கள் வரவேண்டும். 'டேஞ்சர்', 'டோன்ற்வொறி' என்றெல்லாம் பெயர்கள் வைக்க வசதியாக இருக்கும்.**

பழைய காலத்தில் பிள்ளைகளின் பெயர் கடவுளின் பெயராகவே இருக்கும். கந்தசாமி, கணபதி, இராமசாமி, சுவாமிநாதன், சிவகாமி, பாரதி, இலக்குமி என்று பெயர்கள் இருந்தன. இப்போதும் மேற்கு நாட்டு மக்கள் விவிலியத்திலுள்ள டேவிட், ஜோன், மேரி என்ற பெயர்களையே பிள்ளைகளுக்குப் பெரும்பாலும் சூட்டுகிறார்கள். கடவுள் பெயரைப் பிள்ளைகளுக்கு வைப்பதற்கு ஒரு காரணம் உண்டு. பிள்ளைகளை இந்தப் பெயர்களால் அழைக்கும்போது இறை நாமத்தை நாம் அறியாமலே உச்சரிக்கிறோம். வயது முதிர்ந்த காலத்தில் நோய், இயலாமை போன்ற இன்னல்கள் வரும். அப்போது இன்னும் பலமுறை பிள்ளைகளை அழைப்போம். அப்படி அழைப்பதால் நம்முடைய ஆன்ம ஈடேற்றத்துக்கும் வழி கிடைக்கும்.

பதினொராந் திருமுறையில் ஐயடிகள் காடவர்கோன் பாடிய ஷேத்திர வெண்பாக்களில் ஒன்று:

குந்தி நடந்து குனிந்தொருகைக் கோலூன்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி - வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை.

முதிர்ந்த காலத்தில் உடல் நலிந்து வாய்வழியே சளி ஆறாகப் பாயத்தொடங்குமுன் மனமே! திருவையாற்றிலுள்ள ஐயாறப்பனை அழைப்பாயாக! என்பது பொருள்.

எத்தனையோ நல்ல பெயர்கள், சிறிய பெயர்கள், வடமொழியிலும் (வடமொழி வேண்டாம் என்பவர்களுக்கு)தமிழிலும் இருக்கின்றனவே. அவற்றை நாம் எம் பிள்ளைகளுக்கு வைக்கக்கூடாதா?

**க. ஜெகதீசுவரன் - ஆசிரியர்**

**நிர்வாகக் குழு:** திரு. க. ஜெகதீசுவரன் (ஆசிரியர்) திரு. ச. ஆனந்ததியாகர்
திரு. சி. அற்புதானந்தன் திரு. வ. இ. இராமநாதன் திரு. சு. வைத்தியநாதன்

**தொடர்பு முகவரி:** SMS 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

# இந்த இதழில்


திருத்தல யாத்திரையும் தீவினை நீக்கமும் - கந்தபுராணச் சிந்தனைகள் 03

திருமுகங்கள் மூன்று 05

இறைவனின் பெருமையும் அடியவர் பெருமையும் 07

அரன் அருளாலே! 09

இமயம் - கேதாரநாத் பயணக்கட்டுரை 12

மாசி மகம் 16

பொங்கலோ பொங்கல் கவிதை 18

ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி விசேட தினங்கள் 19

சிறுத்தொண்டர் - பெரியபுராணத் தொடர் 22

சைவசமயம் ஓர் அறிமுகம் - நூல் விமரிசனம் 26

படித்தவர் பகன்றவை 30

ஆலய வழிபாடும் வேதாகம நெறியும் 33

பொய்யாத விநாயகர் மூர்த்தி - மலாக்கா 35

கண்ணனும் தாத்தாவும் 38

Hinduism in search of Answers 42

திருக்குறள் கற்போம் 47


**அட்டைப்படம்: சூரியபகவான்**

தீவினைகள் எமக்குத் தெரிந்தும் தெரியாமலும் எம்மால் இயற்றப்படுகின்றன. இத் தீவினைகளின் பயனால் நாம் பல தொல்லைகளில் மாட்டிக்கொள்கிறோம். இவ்வாறு அல்லல் உறும் போது 'கடவுள் கருணை இல்லாதவர்' என்ற எண்ணங்கூட நமக்கு ஏற்படுகிறது. இவ்வாறு அல்லலுற்ற நாம் பின்னர் நல்லறிவு பெறுகிறோம். தீவினையின் பயனை அநுபவிக்கும் காலத்திலே கடவுளைக்கூடத் தரிசிக்கமுடியாமற் போகலாம். சூரனுடைய கொடுமையைத் தாங்காது மனைவியோடு பூவுலகம் வந்த இந்திரன், தேவர்களின் தூண்டுதலால் சிவனைக் காணக் கயிலை செல்கிறான். அங்கே அவர் சனகர் முதலான நான்கு முனிவர்களுக்கும் மெய்ஞ்ஞான போதத்தை உபதேசித்துக்கொண்டிருந்தார். அதனாலே அவனுக்குச் சிவதரிசனம் கிடைக்கவில்லை. மீண்டும் மேரு மலைக்குச் செல்லும்போது பானுகோபன் இந்திரபுரியை அழித்ததையும் சயந்தனைச் சிறை பிடித்ததையும் கேள்விப்படுகிறான்.

**மேகமூர் கடவுள் வெள்ளி வெற்பினி லேகி முக்கண்**
**ஏகநா யகனைக் காணு மெல்லையின் றாக மீண்டு**
**சோகமோ டம்பொன் மேருத் துன்னியே சூரன் மைந்தன்**
**மாகநா டழித்துச் சேயைச் சிறைசெய்த வண்ணந் தேர்ந்தான்**

மேருப்படலம் 31

# திருத்தல யாத்திரையும் தீவினை நீக்கமும்

**கந்தபுராண சிந்தனைகள்**

**சிந்திப்பவர் - முனைவர் சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்**

சிவனை நினைத்துப் பெரும் பூசைகள் இயற்றினான். பூசைகளால் மகிழ்ந்த சிவபெருமான், அவன்முன் தோன்றி, முருகப் பெருமான் அவதாரம் செய்து அசுரர்களை அழித்து, தேவர்களின் குறை எல்லாவற்றையும் நீக்குவாரென அருள் புரிந்தார். இது, தீவினைகள் சூழ்ந்த பின் உள்ள நிலை. தீவினைகள் சூழ்ந்த நிலையில் பெரியோரைத் துணைக்கோடலையும், சிவ வழி பாட்டையுமே மீட்சிக்கான வழிகளாகக் கந்தபுராணம் காட்டுகிறது. இதற்கு மேலாகத் திருத்தல யாத்திரை தீவினை நீக்கலுக்கு ஒரு வழியெனவும் கந்தபுராணம் காட்டுகிறது.

எவ்வாறெனில், முருகப்பெருமான் வள்ளி நாயகியாரைத் திருமணம் செய்துகொண்டு தணிகை மலைக்குச் செல்கிறார். அங்கே சென்றதும் அம்மலையின் பெருமைகளைச் சொல்லும்படி வள்ளிநாயகியார் கேட்கின்றார். முருகப்பெருமான், மலர்களுக்குள் மேலான தாமரை மலரைப் போலவும். ஆறுகளிற் சிறந்த கங்கை ஆறு போலவும் புண்ணியத் தலங்களில் காஞ்சியைப் போலவும் தணிகை மலை மலைகளுட் சிறந்தது என்று சொல்கிறார். சூரனோடு செய்த போரின் உக்கிரந் தணிய இங்கு யாம் சாந்தமூர்த்தியாக இருந்தமையால் இதற்குச் செருத்தணிவரை என்று ஒரு பெயரும் உண்டு. இந்த மலையிலே பல இசைக் கருவிகளை யாம் இசைத்து பாடியும் ஆடியும் மகிழ்வோம். சிவனுக்குக் கயிலையில் எவ்வளவு பிரியமோ அவ்வளவு பிரியம் தணிகை மலையில் எமக்குண்டு என்று இவ்வாறு மலையின் பெருமையைக் கூறிய முருகப் பெருமான் தொடர்ந்து சொல்கிறார்,

இந்தத் திருத்தணிகை மலையைத் தொழுதவர் பாவங்கள் யாவும் நீங்கும். உள்ளத்தில் அன்புடன் இந்த மலையில் வந்து முற்பட இருந்த இந்த நீர்க்கரையில் விதித்த முறையால் மூழ்கி நம் சந்நித்கு வந்து நம்மை வணங்கியவர் நம் பாதார விந்தங்களை வந்தடைவார்.

**இந்த வெற்பினைத் தொழுதுளார் பவமெலாம் ஏகும்**
**சிந்தை அன்புடன் இவ்வரை யின்கணே சென்று**
**முந்த நின்றவிச் சுனைதனில் விதிமுறை மூழ்கி**
**வந்து நந்தமைத் தொழுதுளார் நம்பதம் வாழ்வார்**

**வள்ளியம்மை திருமணப்படலம் 224**

இந்தத் திருத்தணிகை மலையிலே ஐந்து நாள்கள் வாழ்ந்து எம்மடிகளை அடைக்கலமென்று உள்ளத்தில் எண்ணி வழிபடுந் தவத்தவர், தம் உள்ளத்தில் எண்ணிய இன்பங்களை அநுபவித்து முடித்துக் குறைவில்லாத வீடுபேற்றையும் அடைந்து இனிது வாழ்வர்.

**அஞ்சு வைகலிவ் வகன்கிரி நண்ணியும் மடிகள்**
**தஞ்ச மென்றுளத் துன்னியே வழிபடுந் தவத்தோர்**
**நெஞ்ச கந்தனில் வெ்.கிய போகங்கள் நிரப்பி**
**எஞ்ச லில்லதோர் வீடுபே றடைந்தினி திருப்பார்**

**வள்ளியம்மை திருமணப்படலம் 225**

இவ்வாறாக தீவினைகளை நீக்கி, அவற்றின் கொடுமையை அநுபவிக்காது தப்ப விரும்புவர்கள், தீர்த்த யாத்திரைகள் செய்யவேண்டும் என்று கந்தபுராணம் ஓர் ஒழுகும் முறைமையை, ஒரு கலாசாரத்தை சொல்லா நிற்கிறது. அது மாத்திரமன்றி தலவிசேடம், மூர்த்தி விசேடம், தீர்த்த விசேடம் என்பவற்றையும், தம்முடைய குறைகளையும் நோக்கியே யாத்திரைகள் திட்மிடப்படவேண்டும் என்றும் கந்தபுராணம் உணர்த்துகின்றது.

# சைவப் பெரியார் திரு சண்முகவேல்

தூத்துக்குடி சைவப் பெரியார் திரு சண்முகவேல் அவர்கள் திருவடிப்பேறு அடைந்துவிட்டார்கள். அன்னார் தூத்துக்குடியில் சைவசித்தாந்த சபை தொடக்கம் உலகிலே உள்ள பல நாடுகள்வரை சென்று சைவ சித்தாந்தக் கருத்தக்களை மக்கள் புரியும் விதத்தில் பல உரைகளை ஆற்றிய பெருமகனார். அவரும் அவருடைய துணைவியாரும் இணைந்து பல தொண்டுகளைச் செய்துள்ளனர். குறிப்பாக, மறவன்புலவு திரு சச்சிதானந்தன் அவர்கள் தொடக்கி வைத்துள்ள தேவாரம் மின்னம்பலத்தில் தேவாரங்கள் கேட்கும் வகையில் ஒலி வடிவமைக்க இவர் காரணமாக இருந்தவர்.

தமிழ் நாட்டிலும் பல ஊர்களிலே அன்னார் உரை, பயிற்சி, தீட்சை எனப்பல தொண்டுகளை இடையறாது ஆற்றிவந்தவர்.

ஐக்கிய இராய்ச்சியத்திலே சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் நடத்திய சைவ மகாநாட்டிலும் சைவ முன்னேற்றச் சங்கத்திலும் வேறும் பல கோயில்களிலும் சைவ சித்தாந்தத் தலைப்புக்களில் உரையாற்றி, லண்டன் வாழ் சைவத் தமிழர்களின் மனதைக் கவர்ந்தவர்.

அன்னாரின் மறைவு சைவ உலகுக்கு ஒரு பெருநட்டம் என்றுதான் கூறவேண்டும். அன்னாரின் குடும்பத்தினருக்கு கலசம் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்கின்றது. அவர்கள் ஆறுதல் பெற ஆடவல்லானைப் பிரார்த்திக்கிறது.

# திருமுகங்கள் மூன்று

வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்.

மடங்கல், மடல், இதழ், ஓலை, நிருபம். இவைகள் எல்லாம் கடிதம் என்று இன்று நம்மால் சுட்டப்படுவதன் முந்தைய பெயர்கள். இவை எல்லாவற்றையும் விட, 'திருமுகம்' என்ற அழகிய பைந்தமிழ்ப் பெயரே மிக மிகப் பொருத்தமானதும் பொருள் பொதிந்ததும் ஆகும். வெகு தொலைவில் உள்ள கணவனுக்கோ, மனைவிக்கோ, தந்தை தாய்க்கோ, நண்பர்களுக்கோ எழுதும் கடிதத்தில் அவர்கள் எழுத்தைப் பார்க்கமாட்டார்கள். எழுதியவரின் உருவத்தையே பார்ப்பார்கள். 'முகம்' எண்ணங்களின் கண்ணாடி.

**'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம்'**

என்பது பொய்யாமொழி. இத்திருமுகம் பற்றிய சுவையான பாடல்கள் கலம்பகங்களிலே இடம் பிடித்துள்ளன. சுவைக்க ஒரு பாடல்..... திருவரங்கக் கலம்பகத்திலிருந்து. இயற்றியவர் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

மறவன் ஒருவனின் மகளைத் தன் மகனாகிய இளவரசனுக்குப் பெண் கேட்டு மன்னன் ஒருவன் திருமுகம் அனுப்புகிறான் தூதுவன் மூலமாக. திருமுகத்தைக் கண்ட மறவனுக்குக் கோபம் கொப்பளிக்கின்றது. காரணம், திருவரங்கப் பெருமானின் தொழுகுலத்தில் தோன்றிய தான் பிறந்த குடியைவிட இழிந்த குலத்தில் தோன்றிய மன்னன் தன் மகளுக்குப் பெண் கேட்டது என்ன துணிவுபற்றி! பாடல் இதோ,

**கொற்றவன்தன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா**
**குறையுடலுக் கோமறவர் கொம்பைக் கேட்டாய்**
**அற்றவர்சேர் திருவரங்கப் பெருமான் தோழன்**
**அவதரித்த திருக்குலமென்(று) அறியாய் போலும்**
**மற்றதுதான் திருமுகமே ஆனா லந்த**
**வாய்செவிகண் மூக்கெங்கே! மன்னர் மன்னன்**
**பெற்றஇள வரசானால் ஆலின் கொம்பை**
**பிறந்தகுலத் துக்கேற்பப் பேசு வாயே!**

கொப்பளிக்கும் கோபத்திலும் தமிழ் எப்படிக் கொட்டுகிறது பாருங்கள்....... முகத்தைக் கொண்டுவந்தாயே! மற்றைய முகமற்ற முண்டத்துக்கோ பெண் கேட்டாய்? சரி... இது முகம் என்றால் அதன் உறுப்புக்கள் எங்கே? நீ மணம் பேசியது இள... அரசுக்குத்தானே! அரசுக்கு ஏற்றது ஆலமரந்தான்...... என்று மன்னாதி மன்னனையும் மணக்கவ்வ வைக்கும் மறத்தமிழ் நெஞ்சைவிட்டு நீங்காது.

இத் திருமுகங்களை எண்ணும் வரிசையில் முழுமுதற் பெருமானாகிய சிவபெருமானால் அருளப்பெற்றவை மூன்று திருமுகங்கள் ஆகும். ஒன்று புலவன் நிலையிலே புலவர்களுக்கு எழுதியது. இரண்டாவது மன்னவன் நிலையிலே மன்னனுக்கு எழுதியது. மூன்றாவது அடியவன் நிலையிலே அடியவனுக்கு எழுதியது.
இனி அத் திருமுகங்களைக் காணலாம். தலைமைப் புலவன் நிலையில் தமிழ்ச் சங்கப்

புலவர்களுக்கு எழுதிய திருமுகம். குறுந்தொகை இலக்கியத்தில் உள்ளது. 'தருமி' என்ற ஏழை அந்தணனுக்காக எழுதியது.

**கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி**
**காமம் செப்பாது கண்டது மொழிமோ**
**பயிலியது கெழீஇய நட்பின் செறியெயிற்று**
**அரிவை கூந்தலின் நறியவும் உளவோ**
**நீயறியும் பூவே!**

இரண்டாவது திருமுகம் மன்னன் நிலையிலிருந்து சேரமான் பெருமாள் என்னும் அரசனுக்கு எழுதியது. பதினொராந் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. பாணபத்திரன் என்னும் கலைஞனுக்காக எழுதியது. ஒரு கடிதத்தின் இலக்கண வரம்பை எடுத்தியம்பும் அமைப்பில் அமைந்து யார், யாரிடம், யாருக்காக என்ற பகுப்பைத் தெரிவிக்கின்றது. இனி பாடல்,

**மதிமலி புரிசை மாடக் கூடல்**
**பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற**
**கன்னம் பயில்பொழில் ஆல வாயின்**
**மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்**

**பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்(கு)**
**ஒருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்**
**குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்**
**செருமா உகைக்குஞ் சேரலன் காண்க**

**பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்**
**தன்போல் என்பால் அன்பன் தன்பால்**
**காண்பது கருதிப் போந்தனன்**
**மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே**

இனி, மூன்றாவது திருமுகம் அடியவன் நிலையிலிருந்து அடியவனுக்காக அடியவருக்கு எழுதியது. பெற்றான் சாம்பான்..... நான்காம் வருணத்தவன். நாள்தோறும் தில்லை நடராஜப்பெருமானின் திருவமுதிற்காக விறகு வெட்டிக்கொடுத்து, தூயபணி செய்பவன். அவனுக்கு முத்தி கொடுக்குமாறு உமாபதி சிவாசாரியாருக்கு எழுதிய கடிதமா...... இல்லை...... திருமுகமா....... இல்லை...... இல்லை. கைச்சீட்டு! **அடியவர் என்றதும் ஆண்டவன் எத்துணை இரங்கி வருகிறான், இறங்கியும் வருகிறான்!**

**அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்**
**குடியார்க் கெழுதியகைச் சீட்டு - படியின்மிசை**
**பெற்றான்சாம் பானுக்கு பேதமறத் தீக்கைசெய்து**
**முத்தி கொடுக்க முறை**

புலமை சான்ற புலவனாக, மன்னாதி மன்னனாக, அடியார்க்கு எளியவனாக, முப்பரிமாணங்களில், முப்பரம் எரிசெய்த முதல்வனை அவனது எழுத்துக்களினூடு காணும்பொழுது காட்சி தருவது 'திருமுகம்' தானே!

*****

# இறைவனின் பெருமையும் அடியவர் பெருமையும்

இடைக்காடு சயம்பு (வேல்ஸ்)

திருநாவுக்கரசு நாயனாருடைய திருவலஞ்சுழிப் பதிகம் (180). இந்தப் பதிகத்தில் நாயனார் இறைவனுக்கு அடிமையாய் இருக்கும் திறத்தை ஐந்தாவது பாடலில் 'அண்டனுக் கடிமைத் திறன் ஆவனே' என்று பாடினார். அடியாரக்கு அடியராய் இருக்கும் திறனையும் இரண்டு பாடல்களிற் பாடினார். பாடல்கள் 6, 10 இரண்டையும் பார்க்க.

ஆறாவது பாடலில்,

**"மடந்தை பாகன் வலஞ்சுழி யானடி**
**அடைந்த வரக்கடி மைத்திறத் தாவனே"** என்றார்

பத்தாவது பாடலில்,

**"மலங்கு பாய்வயல் சூழ்ந்த வலஞ்சுழி**
**வலங்கொள் வாரடி யென்தலை மேலவே"** என்றார்.

சிவனடியார்களை நாம் வணங்கித் தொண்டு செய்யவேண்டும் என்பதை அப்பர் நமக்கு உணர்த்தியிருக்கிறார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் திருவலஞ்சுழியை வழிபட்டு பதிகம் (262) பாடினார். முதலாவது பாடலில்,

**"............ திருவலஞ்சுழி வாணனை வாயார**
**பன்னி ஆதரித்து ஏத்தியம் பாடியும் வழிபடும் அதனாலே,**
**என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே!"** என்றார்.

"மனமே! நீ நல்ல புண்ணியங்கள் செய்தபடியால், இன்று வலஞ்சுழி வாணனை முறையாக வழிபடக்கிடைத்தது" என்றார். பயன் என்ன என்பதைச் சொல்லவில்லை. இரண்டாவது பாடலில்,

**" ......வலஞ்சுழி யிடமாகக்**
**கொண்ட நாதன்மெய்த் தொழில்புரி தொண்டரோடு இனிதிருந் தமையாலே,**
**விண்டொ ழிந்தன நம்முடை வல்வினை"**

என்றார். "மனமே! உணர்ந்தாயா? சரியைத் தொண்டு செய்பவருடன் கூடியிருந்ததனாலே நம்முடைய வினைகள் எல்லாம் அழிந்துவிட்டனவே! தொண்டர்களுடன் கூடியிருக்கவே வினைகள் நீங்கின், அவர்களுக்கு அடிமைத்தொண்டு செய்தால் உடனே முத்தி கிடைக்காமற் போகுமா?" என்று இறைவன் பெருமையிலும் அடியவர் பெருமை பெரிதென்று உறுதிபட மொழிகின்றார்.

சுந்தரமூர்த்தி நாயனாரை இறைவர் ஆட்கொண்டபோது காட்சிகொடுத்தருளினார்.

**1.** "ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடு" என்று திருவெண்ணெய் நல்லூரில் மொழிந்தார். திருவாரூரிலே அடியவர்களைப்பற்றிப் பாடச்சொன்னபோது "நிறைசொன் மாலை பாடு" என்று அடைமொழிகளும் சேர்த்துச் சொன்னார்.

**2.** முன்னர் தன்னைப் பாட 'பித்தன்' என்ற சொல்மட்டும் அடியெடுத்துக் கொடுத்தார். இங்கே அடியாரைப் பாடச்சொல்லி, பாட்டின் ஒரு பாதி அடியை ஆறு சொற்களை மூலதனமாக எடுத்துக்கொடுத்தார். மேலும் அந்தணர் தமக்கு அடியேன் என்றமட்டில் நில்லாமல், "அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்றார். அடியவரின் பெருமையை இறைவரே புகழ்ந்து நமக்கெல்லாம் அறிவுரை சொல்லியிருக்கிறார்.

தேவார மும்மூர்த்திகளும் தல யாத்திரை செய்து கோயில்களில் வழிபட்ட முறை பின்வருமாறு:

கோயிலை வணங்கி, வீதியை வணங்கி, கோபுரத்தை வீழ்ந்து வணங்கி, தொண்டர்கள், சிவனடியாரை வணங்கியபின், கோயில் புகுந்து இறைவனை வழிபட்டார்கள். முன்னர் அடியவரை வணங்கிய பின்னர் ஆண்டவனை வணங்கினார்கள். தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!

திருஞானசம்பந்த நாயனார் யாத்திரையாய் திருவாலங்காடு வந்து சேர்ந்தார். கோயில் வளாகத்துக்குள்ளே போக அஞ்சினார். காரைக்கால் அம்மையார் தலையால் நடந்து வந்து வழிபட்டு இறைவனடியில் அமர்ந்துவிட்ட தலம் என்று திகைத்தார். அந்தப் புனித மண்ணை மிதிக்கவும் அஞ்சினார். அங்கு தங்காமல் அயலூரிற் தங்கினார்.

சுந்தரமூர்த்தி நாயனார் யாத்திரையாய்ச் சீர்காழியை அடைந்தார். அங்கு வந்ததும் அவருக்குத் திகைப்பும் பயமும் ஏற்பட்டன. பிஞ்சுப் பாதங்களால் பாலறாவாயன் நடந்து நடந்து வழிபட்ட வளாகத்துள் மிதிக்கவும் தனக்குத் தகுதி இல்லையென்று கோயிலைச் சுற்றி வலம் வந்து யாத்திரையைத் தொடர, இறைவர் காட்சி கொடுத்துப் பாராட்டினார்.
அப்பரின் தேவாரம் ஒன்றைப் பார்ப்போம். பதிகம் 133

**நங்க டம்பனை பெற்றவள் பங்கினன்**
**தெங்க டம்பைத் திருக்கரக் கோயிலான்**
**தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்**
**என்க டன்பணி செய்துகி டப்பதே**

இந்தத் தேவாரத்தில் இரண்டு சிறப்புகளைக் காண்கிறோம். ஒன்று சோமாஸ்கந்த மூர்த்தத்தைக் குறிக்கிறார். நாயனாருக்கு இறைவர் அந்தக் கோலத்தைக் காட்டியிருக்கிறார். இரண்டாவதாக ஆண்டவனுக்கும் அடிமைக்கும் உள்ள கடமையைச் சொல்கிறார். அடியவரின் பெருமை விளங்க இறைவரின் கடமையை முன்வைத்தார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சரித்திரத்திலே அவர் கண்ணப்ப நாயனாருக்கு முதன்மை கொடுத்த செய்தியைப் பார்ப்போம்.

**"...........பிறபதிகள் பணிந்தணைவார் பெருகு மன்பால்**
**முன்னிறைந்த திருவாய்மஞ் சனனீ ராட்டு**
**முதல்வேடர் கண்ணப்ப நாய னாரை**
**உன்னியொளிர் காளத்தி மலைவ ணங்க**
**உற்றபெரு வேட்கையுடன் உவந்து சென்றார்"**

யாத்திரையாய் வந்த நாயனார் திருக்காளத்தி மலையை அண்மித்தபோது முதற்கண் கண்ணப்ப நாயனாரை நினைந்தார். பின்னர், திருக்காளத்தி மலையையும் கோயிலையும் வணங்க நினைந்தார். கண்ணப்ப நாயனாரின் பத்திவழிகாட்ட தானும் வணங்கிப் புக்கார். இறைவரை வணங்கி எழும்போது கண்ணப்ப நாயனாரின் சிலையைக் கண்டு.......
கும்பிட்ட பயன் காண்பார்போல் மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார். வீழ்ந்தெழுந்து, வீழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்கினார். கண்ணப்ப நாயனாரை அன்பே உருவாகக் கண்டு அந்த அன்பு உருவத்தினுள்ளே இறைவரையுங் கண்டார். இது ஒரு ஞான குருமூலம் இறைவரைக் காணும் நிலையாகும்.

*****

# அரன் அருளாலே!



அண்மையில் ஒரு செய்தி நம் செவியை வந்தடைந்தது.

கோயில் என்றாலே சிதம்பரம் என்று மனம் நினைக்கும் திருக்கோயிலிலே திருவாசக விழாவும் சிவதீட்சை வழங்கும் விழாவும் நடை பெற்றன என்பதே அது. சென்ற ஆண்டு செப்பெடம்பர் மாதம் 24 தொடக்கம் 26 வரை மூன்று தினங்கள் இந்த விழா நடைபெற்றது. அரனருள் அறக்கட்டளை இவ்விழாவை நடத்தியுள்ளது. இந்த ஆண்டு மூன்றாவது ஆண்டாக நடக்கும் விழா இது. ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயில் சிறப்பு வழிபாட்டுடன் தில்லைவாழ் அந்தணர் பிரம்மஸ்ரீ குப்புசாமி தீட்சிதர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வுகளை சிதம்பரம் மௌன மடத்தின் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ மௌன சுந்தரமூர்த்தி சுவாமிகள் தொடக்கி வைத்தார்கள்.

முதல் நாள் விழாவில் நூற்றுக்கு மேற்பட்ட சிவபூசகர்களின் சிவபூசையும் ஓதுவாமூர்த்தி களின் பண்ணிசையும் நிகழ்ந்ததோடு அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தில் பன்னிரு திருமுறை திருவீதி உலாவும் நடைபெற்றது. அத்துடன் குடந்தை செல்வி ஐஸ்வர்யா பரணிதரன் வழங்கிய ஆனந்த நடனமும் நடந்தது. மூன்று நாள்களும் ஓதுவாமூர்த்தி களின் தேவார, திருவாசக பண்ணிசையும் தமிழ் அறிஞர்களின் திருவாசக சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.


அங்கு வந்த 108 சிவனடியார்களுக்கு திருக்கயிலாய பரம்பரை, திருப்புகலூர் வேளாக்குறிச்சி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சத்தியஞான மகாதேவ தேசிக பராமாசாரிய சுவாமிகள் முறைப்படி சிவதீட்சை அளித்து ஆசீர்வதித்தார்கள். சிவதீட்சை பெற்ற அடியார் களுக்கு 'சிவநெறிச் செல்வர்' என்ற பட்டமும் வழங்கப்பட்டது. 500க்கும் மேற்பட்ட அன்பர்களுக்கு மாகேசுரபூசை செய்து அன்னம் பாலிப்பும் நடைபெற்றது. இதுதான் அந்தச் செய்தி.

இதைக் கேள்விப்பட்டதும் என் நினைவு சில வருடங்களுக்கு முன்னோக்கிப் போனது. ஒரு மாலைப் பொழுதில் Tooting முத்துமாரி அம்மன் கோயிலில், பூசை நடந்து கொண்டிருந்தது. நாதஸ்வரஇசை பின்னணியில் ஒலித்துக்கொண்டிருந்தது. 'பரந்தாமவதீ' என்ற முத்துஸ்வாமி தீட்சிதரின் தர்மவதி இராகக் கீர்த்தனை. அதை நான் கேட்டு இரசித்துக்கொண்டு இருந்தேன். ஒவ்வொரு சந்நிதியிலும் அர்ச்சனை நடக்கும்போது வேதம் ஓதுவதுடன் திருமுறை பாடுவதும் அந்தக் கோயில் வழக்கம். சிவன் சந்நிதியில் அர்ச்சனை கழ்ந்தபோது, தமிழ்த் திருப்பாடல்

ஒலித்தது. அதே தர்மவதி இராகம் திரு விருத்தத்தில் குழைந்து நெளிவு சுழிவுகளோடு தேனாகக் காதிலே பாய்ந்தது. கேட்டதும் கண்ணகளில் நீர் பனித்தது. ஒரு இசைக் கச்சேரியிலே விருத்தம் பாடுவதென்றால் வரிகளைத் திருப்பிப் பாடலாம். சங்க திகளைப் போடலாம். ஆனால் கோயிலிலே திருமுறை பாடும்போது ஒரு வரியை ஒருமுறை மட்டுமே பாடுவது மரபு. அதற்குள் பொருள் சுத்தமாக, இசை சுத்தமாக வரவேண்டும். இன்னொரு இசை ஒலித்து நின்றவுடன் அந்தச் சுருதியே காதில் நிற்கும் என்பதால் சொந்த சுரு தியிலே பாடுவதும் கடினம். இவை எல்வாற்றையும் தாண்டி, என் கண்ணில் நீர் வழிய வைத்தவர் திரு சாமி தண்டபாணி ஓதுவார் அவர்கள்.

முதன்முதல் அவரை நான் பார்த்தது லூயிஷாம் (லூசியம் அல்ல) சிவன் கோயிலில். 1998ஆம் ஆண்டு சித்திரை வருடப்பிறப்பன்று என் தமையனார் திரு உமாமகேசுவரம்பிள்ளையை பேசுவதற்காக அழைத்திருந்தார்கள். அப்போதுதான் அவருடன் சென்ற நான் ஓதுவாரைப் பார்க்க நேர்ந்தது. அவரின் பண்ணிசை யையும் கேட்டு அநுபவிக்க முடிந்தது. தருமபுர ஆதீனத்தில் முறையாக ஐந்து வருடங்கள் பண்ணிசைப் பயிற்சியும் Dr S இராமநாதனிடம் இசைப் பயிற்சியும் பெற்றவர் என்பதை பின்னர் அறிந்துகொண்டேன். தமையனாரும் தருமபுர ஆதீனப் பணியில் இருந்தவேளை ஓதுவாரின் இரசிகராக இருந்தவர்; இப்பொழுதும் இருப் பவர்.

தமிழ் நாட்டிலும், ஈழத் தமிழர் புலம் பெயர்ந்துள்ள நாடுகளிலும் தமிழிலே பூசை செய்யவேண்டும் என்ற ஒலி எழுந்து கொண்டிருக்கிறது. ஆனால் தமிழிலே அமைந்துள்ள பன்னிரண்டு திருமுறைகளை யாருமே கோயில்களில் அதிகம் பாட முயல்வதில்லை. வடமொழி மந்திரங்கள் புரியாது என்பதுபோல் தேவாரங்களும் அவர்களுக்குப் புரிவதில்லை. எனவே பாட முயல்வதும் இல்லை. இந்தக் குறை ஓதுவார் அவர்களை மிகவும் பாதித்திருக்கவேண்டும். அதனாற்போலும் 2004ஆம் ஆண்டிலிருந்து அரனருள் என்ற அறக்கட்டளை மூலம் திருமுறை விழா நடத்தி வருகின்றார்.



சென்னையில் ராஜா அண்ணாமலை மன்றத்தில் விழா நடக்கிறது. இளம் வயதினரை திருமுறைப் போட்டியில் ஈடுபடுத்தி, பரிசு வழங்கியும், அறிஞர்களை அழைத்து திருமுறைத் தலைப்புக்களில் சொற்பொழிவு ஆற்றவைத்தும், ஓதுவார்களைத் திருமுறைகள் பாடவைத்துக் கௌரவப்படுத்தியும் வருகிறார். ஒவ்வொரு வருடமும் பன்னிரண்டு நாள்கள் தொடர்ந்து இவ்விழா நடைபெற்று வருகிறது.

இதன் இன்னொரு பகுதிதான் திருவாசக விழா. கடந்த மூன்று ஆண்டுகளாக திருவாசக விழாவும் சிவதீட்சை வழங்கலும் நடைபெறுவது சைவத் தமிழருக்கு ஒரு விழிப்பை ஏற்படுத்தும் என்பது நம்பிக்கை.

வந்தோம், தேவாரம் பாடினோம், பொருளைத் தேடினோம் என்று திருப்தியாக, தன் குடும்ப நலனை மட்டும் பார்த்துக்கொண்டு திரு சாமி

தண்டபாணி அவர்கள் வாளா இருந்திருக் கலாம். செய்யும் தொழிலில் பற்றும், பத்தியும், மற்றவருக்கும் பயன் கிடைக்க வேண்டும் என்ற சிந்தனையும் உடையவர் அவர். திருமுறை- களைச் சொற்பிழை இன்றி ஓதவேண்டும் என்ற விடயத்தில் மிகவும் கண்டிப்பானவர். அதனாலேதான் அவர் திரு அருளைப் போற்றிப் பாடி ஈட்டிய பொருள் ஊருணி நீர்போல மற்றவர்களுக்குப் பயன்படுகிறது.

பொதுவாக ஓதுவார்கள் என்றால் கோயிலிலே சும்மா தேவாரம் பாடிவிட்டு இருப்பவர்கள், சங்கீத அறிவு அவ்வளவாக இல்லாதவர்கள் என்று ஒரு கருத்து நிலவுவது கேள்விப் பட்டிருக்கிறேன். அந்தக் கருத்தை முற்றாக மாற்றும் வகையில் திரு சாமி தண்டபாணி அவர்கள் மிளிர்கிறார்கள். இந்த நாட்டிலே பலவருடங்கள் இருந்ததாலும், குளிரிலே திரிவதால் அவரின் குரல் சிறிது பாதிப்படைந்து இருந்தாலும் அவரின் இசை ஞானமும் பாடுந்திறனும் எள்ளளவும் குறையவில்லை. அவர் திருவாசகம் பாடுவதை எப்போ கேட்டாலும் அவரின் மோகனம் மோகனமாகவே இருக்கும். அவரின் கானடா, கல்யாணவசந்தம், பேகாக், சுத்தந்யாசி, மோகனகல்யாணி, ஹிந்தோளம், நாகஸ்வராளி இராகங்கள் கேட்டு அநுபவிக்கவேணடியவை. எழுதி அவற்றின் சுவையைப் புரியவைக்க முடியாது. இந்த நாட்டில் அவர் வந்து சுமார் பதினைந்து ஆண்டுகள் பறந்துவிட்டன. ஆனால் இங்குள்ள சைவ மக்கள் அவரின் முழுத் திறமையையும் பயன்படுத்தவில்லை என்பது என் கருத்து. ஒரு சிலரே தேவாரம் கற்க முயன்று ஓரளவு பாடுகிறார்கள்.

ஓதுவார் அவர்களின் சேவையையும் திறமை யையும் பாராட்டி, சைவ முன்னேற்றச் சங்கம் 2003ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13ஆம் திகதி, தம்முடைய 26ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கௌரவித்தது. ஓதுவார் அவர்கள் மேலும் பல்லாண்டு இறைப்பணி புரிந்து எமக்கும் செவிக்கணியாகத் திருமுறை பாடி, தொடர்ந்தும் திருமுறைக்கு சேவை செய்யவேண்டும் என்பது எமது பேரவா. அது நிறைவேற எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளை வழங்கவும் அவர் குடும்பத்துக்கு சகல நலன்களை அளிக்கவும் ஆடல்வல்லானைப் பிரார்திக்கிறோம். அரன் அருளாலே அவர் வாழ்க!

**வான்முகில் வழாஅது பெய்க!**
**மலிவளம் சுரக்க மன்னன்**
**கோன்முறை அரசு செய்க!**
**குறைவிலா துயிர்கள் வாழ்க!**
**நான்மறை அறங்கள் ஓங்க**
**நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மைகொள் சைவ நீதி**
**விளங்குக உலக மெல்லாம்**

- ஜெகதீசுவரன்

*****

## Let your tongue be ruled by Love

When we put bits into the mouths of horses to make them obey us, we can turn the whole animal.
Or take ships as an example. Although they are so large and are driven by strong winds, they are steered by a very small rudder wherever the pilot wants to go.
Likewise, the tongue is a small part of the body, but it makes great boasts. Consider what a great forest is set on fire by a small spark.
The tongue also is a fire, a world of evil among the parts of the body. It corrupts the whole body, sets the whole course of one's life on fire, and is itself set on fire by hell

**James 3:3-6** **Courtesy: Rev David Gnanasekaram**

**யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு** **திருக்குறள் 13 - 07**

# இமயம்

## கேதாரம் - பயணக்கட்டுரை

### சாவகச்சேரியூர் டாக்டர் க. கதிர்காமநாதன்



கேதாரிநாத் இந்தியாவின் இமயப் பிரதேசமான உத்தரகாண்ட்டில் இருக்கிறது. உத்தர என்றால் வடக்கு, காண்ட் - நகரம், இடம். வட எல்லையின் இறுதியில் இருக்கும் இப் பிரதேசத்தை தேவபூமி என்றும் (Land of Gods) என்றும் கூறுவர்.

கேதார் - கேதாரன் என்பது சிவனின் மறுபெயர். கேதாரம் என்றால் வயல் - விளைநிலம் என்ற கருத்தும் உண்டு. 'சிவபெருமான் இருக்கும் இடங்களிலே, கேதாரத்துக்கு இணையாக வேறொரு இடம் இல்லை' என வியாசமுனிவர் பாண்டவர்களுக்குக் கூறியதாக புராணங்கள் சொல்கின்றன. இதைவிட, கந்தபுராணத்தில் இருக்கும் கேதாரகாண்டத்தில் கேதாரத்தின் பெருமை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. சம்பந்தர், சுந்தரர் ஆகிய நாயன்மார்களாலும் ஆதிசங்கரராலும் பாடப்பெற்ற தலமாகும்.

**சிவசக்தி:** இறைவன் - கேதாரீசுவரர்
இறைவி - கேதாரகௌரி

கேதாரீசுவரர் இங்கு சிவக்தியாக - அர்த்த நாரீசுவரராக இருக்கின்றார். கேதாரீசுவரரரின் இடது பக்கத்தை சக்தியாகக் கருதுகின்றனர். 'கணவனும் மனைவியும் இணைபிரியாமல் இல்லறம் நடத்தி நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெறவேண்டும்' என்ற தத்துவத்தை வலியுறுத்துவதே இவ்வடிவமாகும். இங்கேதான் பார்வதி கோபங்கொண்டு பின்னர் விரதம் இருந்து இறைவனின் இடது பக்கத்தை அடைந்தார் எனவும் இதனால் அவரைக் கேதாரகௌரி என அழைப்பர் என்பதும் புராண வரலாறு.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று பெருமைகளும் உரியது இத்தலம். கடல் மட்டத்திலிருந்து 11,750 அடி உயரத்தில் இருக்கிறது. இப் புண்ணிய தலத்தை மந்தாகினி நதி புனிதப்படுத்துகின்றது.

**பயணம்:**

கேதாரி நகரத்தின் மலை அடிவாரந்தான் கௌரிகுண்ட் ஆகும். இங்கிருந்து 7 மைல் தொலைவில் கேதாரநாத் உள்ளது. கௌரி குண்ட் இடத்துக்கு அப்பால் கார், பஸ், சைக்கிள் போன்ற எந்த வாகனமும் போகாது; போகமுடியாது. இங்கு சுடுநீர் குண்டம் ஒன்று உண்டு. சென்ற களைப்புத் தீர நன்கு நீராடல்ாம். ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறாக இடம் உண்டு. நாங்கள்

நீராடினோம், எம் களைப்பும் தீர்ந்தது. இந்த ஊற்றைப் பார்க்கும்போது இலங்கையிலுள்ள கிண்ணியாய் வெந்நீரூற்று நினைவுக்கு வந்தது. அந்த அளவுக்கு இது வெப்பமாக இல்லாவிட்டாலும் அச்சமயம் எமக்கு அரு மருந்தாக இருந்தது. சுடுநீர் குண்டங்களுக்கு சமீபமாக கௌரி குண்டம் இருக்கிறது. இங்கு நீர் மஞ்சள் நிறமாக இருந்தது. இதிலேதான் பார்வதி கேதாரீஸ்வர விரதம் இருக்கும்போது மஞ்சள் தேய்த்து நீராடியதாகச் சொன்னார்கள். இதற்கு எதிர்ப்புறத்தில் பார்வதி கோயில் உண்டு. அங்கு சென்று தரிசித்தோம். கௌரி குண்டை தேவாரத் திருமுறையில் 'அநேகதற்காவதம்' எனக் கூறப்பட்டுள்ளது.

Way to Ketharinath என்ற ஆங்கில வழிக்குறிப்பை முதலில் பார்த்தோம். சில படிகள் ஏறினோம். செல்லும் வழியிலே கடைகள் இருந்தன. ஏற முயல்வோமே என்று ஊன்றுகோல்கள் வாங்கிக்கொண்டு நடந்து சென்றோம். ஒரே மழை. நனைந்துவிட்டோம். இமயத்தில் அடிக்கடி மழை பெய்யும். மந்தா கினி நதியின் பேரோசை முதலில் கேட்டது. பின்னர் சிறிது தூரம் சென்றவுடன் நதியே தெரிந்தது. மலையிலே தோன்றும் புகார்களையும் அடர்த்தியான, பசுமையான மரங்களையும் பச்சிலை கொடிகளையும் மலர்ந்திருக்கும் பூக்களையும் பார்த்து அந்த லாவண்யமான காட்சியைக் காண, அநுபவிக்க, எம்மை அறியாமலேயே ஓர் உவகை, உற்சாகம், தெம்பு பிறக்கும். இமயத்தில் 93 விகிதம் மலை என்றால் அதில் 64 விகிதம் அடர்த்தியான மரங்கள் உடைய காடாகும். இங்கு புலிகள் போன்ற கொடிய விலங்குகளும் உள்ளன.

பகலிலேதான் பயணம் செய்யவேண்டும். அதுவும் கூட்டத்தோடு கூட்டமாகச் செல்லவேண்டும். இதனாற்போலும் மக்கள் கோஷமிட்டபடியே செல்வர். நடந்து செல்ல முடியாதவர் மட்டக்குதிரை மூலம் செல்லவேண்டும். அல்லது தண்டி எனப்படும் நால்வர் சுமக்கும் பல்லக்குப் போன்ற அமைப்புள்ள ஒன்றில் ஏறிப் பயணம் செய்தல் வேண்டும். வேறுசிலர் ஒருவர் முதுகில் சுமக்கும் நாற்காலியில் அமர்ந்து செல்வர்.

நடந்து சென்ற நாங்கள் மழையில் நன்கு நனைந்து களைத்தபின் மட்டக்குதிரையிற் சென்றோம். மட்டக்குதிரை என்பது குதிரைக்கும் கோவேறு கழுதைக்கும் இடைப்பட்ட தோற்றமுடைய ஒரு வகை விலங்காகும். நீர் வீழ்ச்சிகள் பால்போல வெண்மையாக இருந்தன. ஒரு நீர்வீழ்ச்சி மட்டும் தற்பொழுதும் என் கண்முன் வருகிறது. கயிறு அடித்ததுபோல் மிக நேராக, செங்குத்தாக இருந்தது. பார்க்கும்போது பாற்கடலிலிருந்து பால் கொட்டுவதுபோல இரண்டடி அகலத்தில் அழகாக விழுந்துகொண்டிருந்தது. பார்க்கும் போது பூரிப்பான அநுபவம் அது.

ராம்படா என்ற இடத்தை அடைந்தோம். இது பாதிவழி தூரத்தில் இருக்கிறது. இங்கு இருப்பதற்கு இடமும் உண்பதற்குக் கடைகளும் இளைப்பாற வசதிகளும் இருந்தன. மக்கள் இங்கு சிறிது ஓய்வெடுத்து செல்வர். குதிரைகளும் பசியாறி நீர்குடித்து பயணத்தைத் தொடங்க ஆயத்தமாகிவிடும்.

கேதாரநாத்தை சமீபிக்க, 'கேதாரிநாத் மகராஜிகி ஜேய்' என்ற பலத்த ஒலி கேட்டது. நாமும் சிவசிவா என்று மனதில் நினைத்துக்கொண்டு அவர்களுடன் சேர்ந்து கோஷமிட்டோம். அண்மிக்கும்போது வெள்ளை நிறத்தில் பனிப்புகார் சூழ்ந்திருந்தது. இது வானுலகில் இருப்பதுபோன்ற பிரமையை ஏற்படுத்தியது. சிறு பாலத்தைக் கடந்தவுடன் கோயில் கண்ணிற் பட்டது.

நேரம் இரவு 8 மணி. எமக்காகக் காத்திருந்தது போல 'சயன ஆர்த்தியை' இறைவனுக்கு கோயிலுக்கு முன்னாலே வந்து காட்டினர். ஒருவாறு வந்து சேர்ந்துவிட்டோம் என்ற ஆனந்த உணர்வில் கண் கலங்க, மெய் சிலிர்க்க அக் காட்சியைக் கண்டு களித்தோம்.

'இறைவனின் சந்நிதியை அணுக அணுக, உடல் வேறு, உயிர் வேறு என்ற நிலை மாறி, இரண்டும் ஒன்றென்ற நிலையாகி, உறைபனிக் குளிரினால் அங்கமெல்லாம் இல்லாதொழிந்த உணர்வடைந்து பந்தபாசம், சொத்து சுகம்

எல்லாம் மறந்த நிலையை அடைந்து மனம் பக்குவமடையும் நிலை பெறும்' - இடைக்காடு வே சுவாமிநாதர்

மனைவியாருக்கும் நமக்கும் இதைவிட மேலான அநுபவம் கிடைத்தது.

'Biknar House' என்ற ஹோட்டல் - விடுதியில் இரவு தங்கினோம். அங்கு குளிரைப் போக்க வசதியில்லை. எனக்குக் கால்கள் இரண்டும் விறைத்து, பல்லும் படபடவென அடித்தது. மேனி முழுவதும் வெடவெடவென நடுங்கியது. போதாதற்கு மின்சாரமும் நின்றுவிட்டது. மனைவியார் ஓடிவந்து என்னை அணைத்த போது அவரின் உடல் வெப்பத்தால் நடுக்கம் சிறிது குறைந்தது. மனைவியார் அக்கணம் என் நலனுக்காகப் பிள்ளையாரை வேண்டிக் கொண்டார். பின்னர் அங்கு உணவு கொடுத்தார்கள். சூடான சோற்றுடன் சாம்பார், பருப்பு, உருளைக்கிழங்குக் கறி, பப்படம் ஆகியவற்றை வயிறார உண்டோம். உயிர் மீண்டும் உடலுக்குள் வந்த உணர்வு ஏற்பட்டது. ஒவ்வொன்றுக்கும் இருபது ரூபாய் வாடை கொடுத்து இரு கம்பளிப் போர்வைகளை எடுத்துக்கொண்டோம்.

மறுநாட் காலை 4.30 மணிக்கு எழுந்தோம். மின்சாரம் இருந்தது. சட்டையின் உள்ளே குளிர்காக்கும் உடை, மேலே கம்பளிச் சட்டை, அதற்குமேல் மேற்சட்டை, அதற்கும்மேலே போர்வை, தலைக்குத் தொப்பி என எல்லாம் அணிந்து சென்றோம். ஆள் பாதி, ஆடை பாதி என்பார்கள். இது ஆள் கால், ஆடை முக்கால் என்ற கணக்கில் இருந்தது. காலை 5 மணிக்குக் கோயில் சென்றோம். மக்கள் வரிசையிலே அமைதியாகக் காத்திருந்தனர். அவர்களும் எம்மைப்போலவே போர்த்து மூடியபடியே இருந்தனர். வரிசை அநுமனுடைய வால் மாதிரி மிக நீண்டு வளைந்து சென்றது. மனைவியை வரிசையில் நிறுத்திவிட்டு நான் சென்று அர்ச்சனைத் தட்டு வாங்கி வந்தேன். நூற்றியொரு ரூபாவுக்கு அதிலே நெய், பூ, தேங்காய், பழவகைகள், ஊதுவர்த்தி ஆகியவை இருந்தன. கேதாரத்தில் மற்றவர்களொடு நாமும் சேர்ந்து நிற்கும்போது, அரனைத் தரிசித்து அருளைப் பெறுவோம் என்று நினைக்கும்போது குளிர் ஏது? கூதல் ஏது?

காலை 6.30 மணிக்கு கோயில் வாசலை அடைந்தோம். தெற்குத் திசையைப் பார்த்தபடி அமைந்த ஆலயம். பின்னால் சூரிய ஒளி பட்டு வெள்ளிப் பனிமலை உருகுவதும், புகாரும், கதிர்களால் ஏற்படும் வர்ண ஜாலங்களுமான காட்சியை நான் கண்டேன். என்னே அந்த அநுபவம்! பார்க்க மிக மிக இரம்மியமாக இருந்தது. பாரதியாரின், 'வெள்ளிப் பனி மலையின் மீதுலாவுவோம்' என்ற பாட்டுத்தான் நினைவுக்கு வந்தது. கோயிலின் வாசலில் இடது புறத்தில் ஒரு பெரிய பிள்ளையார் தவக்கோலத்தில் காட்சியளிக்கிறார். நான்கு கைகளைக் கொண்டு, வலது கையில் உருத்திராட்ச மாலையோடு காட்சியளிக்கிறார். வினைதீர்க்கும் கணனை வழிபட்டபின்னரே அரனை அடைய வேண்டும் என்ற முறை இருக்கிறதுபோலும். யாவரும் சும்மா கும்பிட்டுவிட்டுப் போகாமல் ஆற அமர்ந்து அபிடேக, அர்ச்சனை, தூப தீப வழிபாடு செய்தனர். நாமும் யமுனோக்கிரியில் எடுத்த யமுனை நதியின் தீர்த்தத்தால் அபிடேகம் செய்து வணங்கினோம். பின்னர், இவருக்குக் கீழே, முன்னால் இருக்கும் செந்நிற நந்தி தேவருக்கும் அபிடேகம் செய்து வழிபட்டோம். கோயிலின் இருபுறமும் உள்ள துவாரபாலகரை வணங்கி உள்ளே சென்றோம். குளிரினால் நடுங்கினாலும் மக்கள் கூட்டத்தோடு ஒன்றி உட்புகும்போது பத்தி வரும்!

கருங்கல்லால் அமைந்த முன் மண்டபத்தை



சபா மண்டபம், நவக்கிரக மண்டபம் என அழைக்கின்றனர். இங்கு நான்கு தூண்கள் இருக்கின்றன. தர்மம், காமம், மோட்சம் என்ற நான்கு தத்துவங்களை அவை பிரதிபலிக் கின்றனவாம். மேலேயுள்ள வட்டங்கள் நவக்கிரகங்களைக் குறிக்கின்றன. நடுவிலே சூரியபகவான் இருக்கிறார். உள் மண்டபத்தைச் சுற்றிப் பார்க்கும்போது பஞ்சபாண்டவர்கள் கற்சிலையாகக் காட்சி தருகின்றனர். வலது பக்கத்தில் தருமமே உருவாக தருமரும் இடது பக்கத்தில் குந்திதேவியும் இருக்கின்றனர். தவக்கோலத்தில் அருச்சுனனையும், கதையோடு பீமனையும், வில்லுடன் நகுல சகாதேவனையும் காணலாம். கண்ணபரமாத்மாவும் திரௌபதியும் கூட இருக்கின்றனர். பாரதப் போரில் உற்றார், உறவினர், குருமார்களைக் கொன்ற பாண்டவர்கள் பிரம்மகத்தி தோஷம் நீங்க பூசித்த தலம் இதுவென்ற ஐதீகம் உண்டு.

கருவறையினுள் ஆறடி சதுரத்தில் மூன்றடி உயரத்தில் கூரிய முனையோடு முக்கோண வடிவில் ஒரு காளையின் பின்புறம்போல - கற்பாறையாக - இமயத்தின் அங்கமாக - கேதாரீஸ்வரர் அமர்ந்திருக்கிறார். மக்கள் கூட்டம் கூட்டமாக சுற்றி இருந்து நெருங்கி நின்று வழிபாடு செய்துகொண்டிருந்தனர். இவர்களோடு முண்டியடித்துக்கொண்டு எப்படி வணங்குவது என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது கடவுள்போல ஒரு தமிழ்நாட்டு வாசி கைகொடுத்தார். தமிழில் எம்முடன் பேசி, இந்தி மொழியில் மற்றவர்களுடன் பேசி கூட்டத்தை விலக்கி, முதலில் நெய்யாற் தொட்டு வணங்கும்படி சொன்னார். பின் யமுனைத் தீர்த்தத்தை ஊற்றி அபிடேகம் செய்த பின் பூவைச் சார்த்தி தீபம் காட்டி, தேங்காய் உடைத்து அர்ச்சனை செய்தோம். வணங்கும்போது அடைந்த திருப்திக்கு அளவேயில்லை. இரவு பட்ட கஷ்டத்துக்குப் பலன்தான் என்னவோ!

ஜோதி லிங்கமாக, சுயம்புவாக இருக்கும் இறைவனக் காலையில் நெய் தடவி, பூவைத்து வழிபடுவது நிர்மாலிய தரிசனம் ஆகும். மாலை 5 மணியிலிருந்து 6 மணிவரை 'போகம்' என்ற நைவேத்தியப் படைப்பு. இரவு 8 மணிபோல் சிருங்கார, அலங்கார தரிசனம். அலங்கார தரிசனத்தின்போது பத்தர்களைக் கர்ப்பக் கிருகத்துள் அநுமதிப்பதில்லை. இறுதியாக சயன ஆர்த்தி.

கோயிலின் பின்புறத்தில் ஆதிசங்கரரின் சமாதி உள்ளது. 32 வயதில் இறந்த, தட்சிணா மூர்த்தியாகக் கருதப்படும் இஞ்ஞானி தன் இறுதிக் காலத்தை இங்கு கழித்தது குறிப்பிடத்தக்கது.

கேதாரீஸ்வரர் போன்று இமயத்தில் அமைந்துள்ள கோயிலை வாழ்வில் ஒரு முறைதான் தரிசிக்க முடியம். ஆதலால். நாம் அங்கு இருந்த காலத்தில் மீண்டும் மீண்டும் சென்று ஆசைதீர வழிபட்டோம். பின்னர் ஐஸ்போலக் குளிரும் மந்தாகினி நதியின் தண்ணீரைத் தீர்த்தமாக எடுத்துக்கொண்டோம்.

கேதாரீசுவரரை வருடத்தில் 6 மாதந்தான் அடைய முடியும். மூடுபனிதான் காரணம். சித்திரை மாதக் கடைசியிலிருந்து கார்த்திகை மாதத் தொடக்கம் வரை செல்லலாம். மலைச்சரிவு, மண்சரிவு, வெள்ளம் யாவையும் தவிர்த்து இறையருளால் அடையமுடியும்.

**கேதாரகௌரி விரதம்:**

கேதாரம் இடத்தின் பெயர். கௌரி அம்பாளின் பெயர். இவ்விரதம் புரட்டாதி மாதம் சுக்கிலபட்ச தசமி தொடங்கி ஐப்பசிமாத கிருஷ்ணபட்சம் தீபாவளி அமாவாசை வரை 21 நாள்கள் அநுட்டிக்கப்படுகிறது. ஒவ்வொரு முடிச்சாக நாள்தோறும் இடப்பட்டு இறுதி நாளன்று கோயில் சிவாசாரியாரைக் கொண்டு ஆண்கள் தம்முடைய வலது கையிலும் பெண்கள் இடது கையிலும் அணிவர்.

**பலன்:**

மங்களகரமான வாழ்வை, வறுமை நீங்கி, குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம் பெற வேண்டி ஆண்கள் அநுட்டிப்பர். பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை வேண்டியும் மணமானவர்கள் நீண்ட மாங்கல்ய பலத்தை வேண்டியும் தொடர்ந்த மகிழ்வான வாழ்க்கைக்கு வேண்டி விதமிருப்பர்.

*****

# மாசி மகம்



'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும்பொருட்டேயாம்' என்பது யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வாக்கு. முத்தியென்பது விடுதலை. இதனை வழிபாட்டினாற் பெறலாம்.

இந்த வகையில் ஆலயங்களில் நடைபெறும் விழாக்கள், விரதங்கள் நம்மை நல்ல நிலைக்கு இட்டுச்செல்லும் வழிகளாம். மாசி மகத்தில் வரும் காலட்டு விழா சைவ மக்களாற் கொண்டாடப்படும் பெரு விழாக்களில் ஒன்றாகும். தீர்த்த விழாக்களிலும் சிறந்தது மாசிமகத் திருவிழாவாகும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை வருவது மகாமகம். அதாவது குரு பகவான் சிங்கராசியில் வருங்காலம். அப்பொழுது குருபகவான் சந்திரனுடன் கூடி சிங்கராசியில் இருந்து கும்பராசியிலுள்ள சூரிய பகவானை பூரண பார்வை செய்வார். இதனை 'கும்பமேளா' என்றுங் கூறுவார்கள்.

அன்றைய தினம் ரிஷிகள் ஞானிகள் சித்தர்கள் பத்தர்கள் யாவரும் திரிவேணி சங்கமத்தில் நீராடி இறையருள் பெறுவார்கள். சிலர் கும்பகோணம் போன்ற ஆலயங்களிலுள்ள தீர்த்தங்களிலும் நீராடுவார்கள்.

இறைவனுக்கு பற்பல சிறப்புக் காலங்களில் நீராட்டு விழாக்கள் நிகழ்வதானாலும் மாசி-மாத மக நட்சத்திரத்தன்று நீராட்டுக்கு மிகவும் சிறப்புடையதாகக் கொள்ளப்படுகின்றது.

இதனை திருஞானசம்பந்தப் பெருமானுடைய அருள்வாக்காலும் அறியக்கூடியதாக உள்ளது.

**மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்**
**கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்**
**அடலானே றூரும் அடிகள் அடிபரவி**
**நடம் ஆடல் காணாதே போதியோ பூம்பாவாய்**

என்று பாடியுள்ளார்.

இவ்வாறான பெருமையுடைய மகாமகத்தன்று இறைவனை நினைந்து வணங்கி நாமம் கடலிற், புண்ணிய தீர்த்தங்களில் நீராடி இறையருள் பெறுவோமாக.

**திரு ஆ இராசரத்தினம்**



ஸ்ரீ லகுலாம்பிகை உடனுறை ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி திருக்கோவில் கீரிமலை - மகா கும்பாபிஷேகம் - 06 - 02 - 2012 - திங்கட்கிழமை நடைபெறுகிறது.

இந்தப்பக்கம் ஓர் அநாமதேய அன்பரின் அன்பளிப்பு

# பொங்கலோ பொங்கல்

- திருமதி புவனேஸ்வரி சபாரத்தினம் -

இயற்கையோ டிசைந்த
இறையுணர்வு கொண்ட
தமிழன் வாழ்வு
தழைத்தோங்கியது ஒருகாலம்
அந்நியரின் வாழ்வியலும் கருத்தியலும்
பின்னிப் பிணைந்ததனால் - இன்று
தன் நிலைமை புரியாமற்
தடுமாறித் தவிக்கின்றான்!

கூதற் காற்றும் தூறல் மழையும்
கூடல் கொண்ட காலம் அஃதில்
தரணியிலே தடம் பதிப்பாள்
தை என்னும் தையலவள்!

தைபிறந்தால் வழிபிறக்கும் என
மெய்ம்மறந்து மனம் மகிழ்ந்து
களிப்புடனே காத்திருப்பான்
கலப்பை ஏந்தும் தமிழ் உழவன்!

வாடைக் காற்றுவந்து வருடலுடன் கொஞ்சிநிற்க
கதிரவனின் கதிர் வீச்சுக் கண்டு
நாணித் தலைகுனிவாள்
நன்னிலம் நோக்குவாள்
செந்நெற் கதிர்களாய்!

தமிழன் வாழ்விலே அதுவோர் பொற்காலம்
பட்ட தொல்லை நீங்க
தொட்டதெல்லாம் மிளிர
ஞாயிறுமுன் ஒருபொங்கல்
நன்றியுடன் படைத்திடுவான்

கோமாதா என்றும் குலமாதா என்றும்
போற்றிப் புகழ்ந்து மாட்டுக்கும் பொங்கல்
மகிழ்வாக வைப்பதனால் - தமிழரின்
பண்பாடு தலைசிறந்து இருப்பது கண்டோம்.

யானைகட்டிப் போரடித்த உழவன் ஈழத்தில்
யாருமற்ற ஏதிலியாய் கால்வயிற்றுக் கஞ்சிக்காய்
கையேந்தும் கோலத்தில் நம்நெஞ்சு ரணமாக!

தரணியிலே தமிழன் இனி பரணிபாடவேண்டும்
நிலை உயர்ந்து மொழியறிந்து
தலை நிமிர வேண்டும்!
தைப்பொங்கல் என்பது தமிழர் பண்டிகை -
தன்மானப் பண்டிகை - அதைப்
போற்றிப் புகழ்ந்திடுவோம்!
கொண்டாடி மகிழ்ந்திடுவோம்.



உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

ஜனவரி (15-01-2012) தொடக்கம் ஜூன் (30-06-2012) வரை

| | | |
|---|---|---|
| 15.01.2012 | ஞாயிறு | தைப்பொங்கல் |
| 19.02.2012 | ஞாயிறு | சிவராத்திரி |
| 06.03.2012 | செவ்வாய் | நடேசர் அபிஷேகம் |
| 02.04.2012 | திங்கள் | யோகர் சுவாமி குருபூசை |
| 08.04.2012 | ஞாயிறு | காரைக்கால் அம்மையார் குருபூசை |
| 13.04.2012 | வெள்ளி | நந்தன ஆண்டுப் பிறப்பு |
| 16-04-2012 | திங்கள் | திருநாவுக்கரசு நாயனார் குருபூசை |
| 12.05.2012 | சனி | நடேசர் அபிஷேகம் |
| 26.05.2012 | சனி | சேக்கிழார் குருபூசை |
| 05.06.2012 | செவ்வாய் | திருஞானசம்பந்தர் குருபூசை |

விசேஷ அறிவித்தல்: ஸ்ரீ சிவகாமசுந்தரி சுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.

தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"


Suriya Jewels
சூரியா ஜுவலஸ்
22CT Singapore Gold
JEWELS LTD
22CT Singapore Gold
மலிவு விலையில்
தரமான தங்க நகைகள் வேண்டுமா?
திருமண வைபவத்திற்கு தேவையான அனைத்து நகைகளையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
உண்மையே வெல்லும்
SURIYA JEWELS
292, High Street, North Eastham - London E12 6SA
Tel: 0208 552 22 24
Fax: 0208 821 94 35


கேதாரம்



ராசம் காயத்திரி சில்க்ஸ்
Rasam Gayatri Silks
19ம் ஆண்டு நிறைவு காணுகிறது
மிலேனியத்தில் மிளிரும்
சேலைகளின் சோலை
கண்கொள்ளாக் காட்சி தரும்
புதுமை நிறைந்த கூறைச்சேலைகள்,
மணவறைச் சேலைகள்
Millenium Designer Latest Silk Sarees
Deepam - Kolam - Mangalyam - Suyamvaram
Golden Tissue Wedding Collection Sarees
இலங்கை - இந்தியா உள்ளூர் விற்பனைக்கு வராத
Export Quality Soft Special Designer Sarees
ஏழு நாள்களும்
11am - 8pm
திறந்திருக்கும்
Rasam Gayatri Silks
312 High Street North, Eastham, London E12 6SA
Tel: 0208 552 6060

# சிறுத்தொண்டர் நாயனார்

மு. சிவராசா

தமிழ் நாட்டில் ஒரு சிற்றூர். செங்காட்டங்குடி அதன் பெயர். காவேரிக் கரையில் இருப்பதால் நீர் வளம், நிலவளம் மிக்கது. அவ்வூரில் அவதரித்தார் ஒருவர். அவர் பெயர் பரஞ் சோதியார். காவல் தொழில் பூண்ட படைவீரர். யானை ஏற்றம், குதிரை ஏற்றம் மட்டுமன்றி ஆயுர்வேதக் கலை, வடமொழிப் புலமை மிக்கவர். மன்னன் அவரைப் படைத் தள பதியாக்கினான். அவர் தம் உழைப்பிலே கிடைக்கும் வருமானத்தை சிவனடியார் பணிக்கெனக் கொண்டார். மன்னனுக்காகப் போர் பல கண்டு அவனுக்குப் புகழும் பொன்னும் சேர்த்தார். ஒரு சமயம் வடபுலம் வாதாபி நகரை வெற்றிகொண்டு அந்நகரின் நினைவில் கணபதீச்சரம் கோயிலைத் தம் ஊரில் அமைத்தார். பரஞ்சோதியாரின் திறமைக்கு அவர்தம் ஈசனடியார் தொண்டே காரணம் எனப் பலரும் கூறக்கேட்ட மன்னன் இவ்வாறான தொண்டரை படைத் தளபதியாக்கி பாபம் செய்தேனே எனக் கவலை கொண்டான். எனவே அவன் அவரை அப் பதவியிலிருந்து விடுவித்து அடியார் தொண்டைச் செய்ய ஊக்குவித்தான். அவர் தொண்டை வியந்து மக்கள் அவரைச் சிறுத்தொண்டர் எனப் போற்றினார். அவரின் இல்லற வாழ்வை நிறைவு செய்ய திருவெண்காட்டு நங்கையார் மனைவியாக அமைந்தார். அவர்களின் அருமைப் புதல்வன், ஒரே மகன் சீராளன்.

பரஞ்சோதியார் தம் வாழ்விலே ஒரு கொள்கையைக் கடைப்பிடித்தார். தினமும் தாம் உணவு கொள்ளுமுன் ஒரு சிவனடி யாருக்காவது உணவு கொடுத்தல் என்பதே அந்தக் கொள்கை. சீரோடும் சிறப்போடும் வளர்ந்த சீராளதேவர் பள்ளிக்கூடம் செல்லும் பருவமான ஐந்து வயதை அடைந்தார். பரஞ்சோதியார் கொண்டிருந்த கொள்கையை பத்தர் அறிந்துகொள்ள வேண்டுமெனத் திருவுளம் கொண்டார் இறைவன். அதற்காக, அறுசமயங்களில் ஒன்றான பயிரவ சமய ஆசாரிய வேடத்தில் சிவன டியார் போலப் பரஞ் சோதியார் இல்லத்துக்கு வந்தார். அன்று சிவனடியார் எவரும் உணவு ஏற்க வராததால் பரஞ்சோதியார் அடியவர் ஒருவரைத் தேடி வெளியே சென்றிருந்தார். வாசலுக்கு வந்த பயிரவ அடியாரை உள்ளே வரும் வண்ணம் வெண்காட்டு நங்கையார் வேண்டினார். ஆண்கள் இல்லாத நேரத்தில் வீட்டின் உள்ளே வரமறுத்த அடியவர் தாம் ஆலயத்தில் ஆத்தி மர நீழலில் தங்கி இருப்பதாயும் பரஞ்சோதியார் வந்ததும் தெரிவிக்கும்படியும் கூறிச் சென்றுவிட்டார். சிவனடியார் யாரும் எதிர்ப்படாத காரணத்தால் கவலையோடு வீடு திரும்பிய பரஞ்கோதியாருக்கு பயிரவ அடியார் பற்றிய விவரத்தை மனைவி சொன்னார். மகிழ்ச்சியோடு பரஞ்சோதியார் அடியவரை அடைந்தபோது, பயிரவர், 'நாடு புகழும் பெரிய சிறுத்தொண்டர் நீரோ?' எனக் கேட்டார். 'அடியவர்கள் விபூதி தரிப்பதைப் பார்த்து நானும் அவ்வாறு அணிவதால் கருணை உள்ளம் கொண்ட அவர்கள் என்னை அவ்விதம் அழைக்கின்றனர். இன்று சிவனடியார் எவரும் வராததால் ஒருவரைத் தேடி வெளியே சென்றிருந்தேன். நான் செய்த தவப்பயனால் தேவரீர் எழுந்தருளினீர். திருவமுது செய்ய வரவேண்டும்' என இறைஞ்சினார்.



துறவியார், "நாம் வடக்கிலிருந்த வருகிறோம். ஆறு மாதத்துக்கு ஒருமுறை மட்டும் உணவு கொள்ளும் விரதம் உடையோம். அந்த நாளும் இன்றுதான். உண்பது நரமாமிசம். அதிலும் நல்ல குடியிற் பிறந்த ஆண் குழந்தையாய் ஐந்தே வயது நிரம்பியவனாய் தாய் பிடிக்க. தந்தை அரிந்த உடலைச் சமைத்தல் வேண்டும்.

அந்த நேரத்தில் அம்மூவரும் கவலை அற்றவர்களாய் இருத்தல் அவசியம். இந்தவித அமுது தர இயலுமா?" என்று கேட்டார். "அப்படியே செய்கிறேன். விடை தாருங்கள்" என்று சொல்லி, பரஞ்சோதியார் வீடு வந்து மனைவிக்கு விவரம் கூறி தங்கள் மகன் சீராளனையே சமைப்பதற்குத் துணிந்தனர். பள்ளிக்கூடம் சென்ற மகனைக் கூட்டிவந்து இருவரும் வீட்டின் புறத்தே மறைவான ஓரிடத்தில் துறவியார் கூறிய வண்ணமே அரிந்து, அரிந்த தலை கறிக்கு ஆகாதென ஒருபுறம் தள்ளி, மீதி இறைச்சியைக்கொண்டு பலவித கறி சமைத்து அடியவரை விருந்துண்ண அழைத்தனர். உணவு கொள்ளமுன், அவர், தாம் தனியாக உண்ண முடியாது. ஒரு சிவனடியாரையாவது அழைத்துவாரும் என்று கூறினார். வேறு யாரும் கிடையாததால் தாமே கூட இருந்து உண்ணுவதாக பரஞ்சோதியார் சொன்னதும் "உம்முடைய பிள்ளையை அழைத்துவாரும். விபூதி தரலாம்" என்றார். "அவன் இப்போது இங்கு உதவான்" எனப் பதிலிறுத்தார் நாயனார். "அவன் வராமல் நாம் உண்ணமாட்டோம். போய் அழைத்துவாரும்" எனக் கடிந்து கூறினார் பயிரவர். தந்தை, தாய் இருவரும் வீட்டின் புறத்தே சென்று மகனைக் கூவி அழைத்தார்கள். பாடசாலையிலிருந்து வருவது போல் சீராளன் ஓடிவந்தான். அவனோடு துறவியைக் காண வந்ததும் அங்கு அவரைக் காணவில்லை. இறைச்சிக்கறி அமுதும் மறைந்தது. இறைவன் சோமாஸ்கந்தராக காட்சி கொடுத்து அவர்கள் மூவரையும் தலைக்கறி சமைத்த சந்தனநங்கையாரையும் பெருங் கருணையோடு தம் அடியின் கீழ் நிரந்தரமாக இருக்க அருள்புரிந்தார்.

"வாளான் மகவரிந்து ஊட்ட வல்லேன் அல்லேன்" என்பது முற்றுந் துறந்த பட்டினத்து அடிகளின் திருவாக்கு.

***

# உலகெலாம்.....

திருத்தொண்டர் புராணத்தைப் பாட இறைவர் சேக்கிழாருக்கு 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்தார். 'உலகெலாம் உணர்ந்தோதற்கு அரியவன்' என்று நடராஜப் பெருமான் துதியாகச் சேக்கிழார் பாடினார். புராணத்தின் நிறைவுப் பாடலிலும் இதே சொல்லைக் கடைசியில் அமைத்தார். 'நின்றதெங்கும் நிலவி உலகெலாம்' என்று நிறைவுசெய்தார். தெய்விக அமைப்பாக, புராணத்தின் நடுப்பகுதியிலும் 'ஓதி ஏறினார் உய்ய உலகெலாம்' என்று அமைத்துள்ளார். இந்த மூன்று செய்யுள்களும் ஒரே யாப்பில் அமைந்துள்ளன. இதே யாப்பில் அமைந்த பிறிதொரு பாடலிலும் 'உலகெலாம்' என்ற சொற்றொடர் வருகிறது. பத்தொன்பது பாடல்களில் 'உலகெலாம்' என்று வருகிறது.


சிவனடியார்களின் பெயர்களையும் பெருமை களையும் தொகுத்து திருத்தொண்டத் தொகையாகத் தந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள்




அந்தப் பதிகத்தில் 11 திருப்பாடல்களை அமைத்தார். இந்தத் தொண்டு நாம் நித்திய வழிபாட்டில் ஓதும் பதினொரு மந்திரங்கள் போலாகும். நாயன்மார்களின் பெயர்களை ஓதினாலும் அருள் கிடைக்கும்.


**தகவல் இடைக்காடு சயம்பு**

# விநாயக விரத வழிபாடு நிறைவு – 30.12.2011










# மார்கழி திருவாதிரை அபிஷேகம்– 08.01.2012









# சைவ சமயம் ஓர் அறிமுகம்

## சிறுவர் சமய இலக்கியம் - புத்தக விமரிசனம்

- அநுராதா -

இந்த நூலை நோர்வே நாட்டிலுள்ள இந்து கலாசார ஒன்றியம் வெளியிட்டுள்ளது. நோர்வேயில் உள்ள தமிழ்ச் சிறுவர்களுக்குத் தமிழ் வகுப்புக்களையும் கலாசார அறிவூட்டும் பட்டடைகளை யும் ஒன்றியம் நடத்தி வரு கிறது. அதன் தொடர்ச்சியாக சிறுவர்களுக்குச் சைவசமய அறிவைப் புகட்டவென இந்த நூலை எழுதுவித்து வெளியி டுவதாக நூலின் பதிப்புரை யிலே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நூல் 15 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை மனதிற் கொண்டு எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் வழக்கறிஞரும் தமிழறிஞருமான திரு செ சிறிகந்தராசா அவர்கள்.




நூலாசிரியர் குறிப்பிலே, 'மேற்குலகுக்கு வந்தபின்னர், ஏன்?, எதற்கு?, முறையா?, தகுமா?, மனிதஉரிமை மீறலாக அமையாதா? என்று கேட்கப் பழகிவிட்ட தமிழ்ச் சிறார்க்கு என எழுதப்படும் நூலில் எதைத் தள்ளுவது, எதைக் கொள்ளுவது, எதை முதலில் எழுதுவது, எவ்வளவை எழுதுவது என்ற வினாக்கள் சிக்கலாக அமைந்தன.' என்று கூறியுள்ளர்.

நூலைக் கையில் எடுத்தவுடனேயே அதன் அளவும் வெளி அட்டையும் கண்ணையும் மனதையும் கவரும் வகையில் அமைந்துள்ளன. சிறுவர்களுக்கென இலகுவான தமிழ் நடை, சுருக்கமான, வரைவிலக்கணம் போன்ற விளக்கங்கள், வண்ணப் படங்கள் ஆதியன நூலுக்கு மேலும் மெருகூட்டுவன. சட்ட வல்லுனர் என்பதாற்போலும் ஆரம்பத்திலேயே ஆசிரியர் சமயத்துக்கும் சட்டத்துக்கும் அழகான முடிச்சைப் போட்டு, 'சமயந்தான் சட்டத்துக்கு வித்து' என்றெழுதி படிப்பவர் மனதை கவர்கிறார்.

சைவத் தமிழ்க் கலாசாரத்தில் கொள்ளுவது எது, தள்ளுவது எது என்று தடுமாறுபவர்களுக்கு விடைபோல இந்நூல் இருக்க வேண்டும் என்பது பதிப்பாளரின் நோக்கம். அதை மிக நிறைவு செய்துள்ளார் ஆசிரியர். சைவ சமயத்தில் ஏன் பல கடவுள்கள்? சைவத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் எவை? ஆகிய வினாக்களுக்கான விடைகளை முறையே முன் சில பக்கங் களிலும் பின் பக்கங்களிலும் எழுதி நடுவிலே சிவன், வேறு சைவக்கடவுள் மூர்த்தங்கள், வழிபாடு, விரதம் போன்ற விடயங்களையும் எழுதியுள்ளார். சமயகுரவர், சந்தான குரவர், திருமூலர், பட்டினத்தார் போன்ற ஞானிகள் பற்றிய குறிப்புக்களும் ஆறுமுகநாவலர், விபுலாநந்தர், போன்ற அறிஞர் பற்றிய குறிப்புக்களும் தரப்பட்டுள்ளன. 71 தலைப்புக்களிலே பல்வேறு விடயங்கள் அழகாகக் கையாளப்பட்டிருப்பது மிகவும் சிறந்த முயற்சி. சைவ சமயம் பற்றிய நூல் என்றாலும் படிக்கும் பிள்ளைகளின் சிந்தனையைத் தூண்டும் விதத்தில் பிற சமயங்களைப் பற்றிய குறிப்புக்களும் உள்ளன. விடயங்களை அளவாக, அதே வேளை குறைவின்றி நிறைவாக உதாரணங்கள் காட்டி எழுதியிருப்பது படிப்பவர் இலகுவாகப் புரிந்து கொள்ள உதவும் என்பதில் சந்தேகமேயில்லை.

சிவமூர்த்தங்கள், பண்டிகைகள், விழாக்கள், ஞானிகள், பெரியார்கள் பற்றிக் குறிப்பிடும்போது ஆங்காங்கே அருமையான பாடல்களும் தரப்பட்டுள்ளன. இது

படிப்பவருக்கு மேலும் பல நூல்களைத் தேடவேண்டும், மேலும் அறியவேண்டும் என்ற ஊக்கத்தை வளர்க்க உதவும். இறுதியில் தெரிவுசெய்த திருமுறைப் பாடல்கள் சிலவற்றையும் இணைத்திருப்பது பாராட்டுக் குரியது. பாடற்தெரிவிலும் மிகுந்த கவனம் செலுத்தியிருப்பது இங்கு குறிப்பிடவேண்டிய தொன்று. குறிப்பாக, கந்தபுராணப் பாடலில் சூரன் கூறுவதாக வரும் பாடலைக் குறிப்பிடலாம். தேவர்களைச் சிறையிட்டது தவறு என்று பலர் சொன்னார்கள். ஆனால் நான் அதைச் செய்ததனால் அன்றோ விண்ணோரும் காணமுடியாத கடவுள் என்னருகே வந்தார் என்று சூரன் கூறுவதுபோல அமைந்த பாடல் அது.

**ஏதுமில் அமரர் தம்மை யான்சிறை செய்த தெல்லாம்**
**தீதென உரைத்தார் பல்லோர் அன்னதன் செய்கையாலே**
**வேதனும் அயனும் ஏனை விண்ணவர் பலருங் காணா**
**நாதனிங் கணுகப் பெற்றேன் நன்றதே யான தன்றே!**

நூலாசிரியரின் இலக்கியச் சுவையை அறிய இந்த ஒரு பாட்டு போதுமானது.

சிவனின் நிறம் சிவப்பு என்று (பக்கம் 15) குறிப்பிட்டிருந்தாலும் பிரசுரித்தவர்கள் சிவனை நீல நிறமாகச் சித்திரித்திருப்து (பக்கம் 16) நெஞ்சை நெருடியது. சிவ்னின் நிறம் சிவப்பே!

பிறப்போடு இறப்பென்றும் என்ற தேவாரத்தில் (பக்கம் 64) மறப்படுமென் 'சிந்தனை' மருள் என்று வருவது மறப்படுமென் 'சிந்தை' மருள் என்று வரவேண்டும். அதுபோல ஒன்பதாம் பக்கத்தில் வரும் திருக்குறள்

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் இந்நான்கும் இழுக்காது இயன்றது அறம் என்று வருகிறது.

இதிலே இந்நான்கும் என்பது நான்கும் என்றே இருக்கவேண்டும். இழுக்காது என்பது இழுக்கா என்று வரும். இவைகள் தவிர்க்கப்படக்கூடிய எழுத்துப் பிழைகள். பதிப்பவர்கள் கவனத்துக் காகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மொத்தத்தில் இந்த நூல் தலைப்புக்கு ஏற்ப அழகாக சைவசமயத்தை அறிமுகம் செய்வதில் வெற்றி கண்டிருக்கிறது. படங்கள் மிகவும் பொருத்தமானவையாயும் அழகானவையாகவும் இருக்கின்றன. சைவசமய அடிப்படைக் கொள்கைகள் என்ற தலைப்பில் சைவ சித்தாந்தக் கொள்கைகள் என்று 10 குறிப்புக்களாக, சுருக்கமாகக் கொடுத்திருப்பது நூலாசிரியர் ஆக்கியுள்ள ஒரு பானை சோற்றுக்குப் பதம் பார்க்க ஒரு சோறு. **நூலாசிரியரை வழக்கறிஞரும் தமிழறிஞரும் என்று குறிப்பிட்டவர்கள் இனி சமய அறிஞரும் என்று சேர்த்துக் குறிப்பிடலாம்.**


**If you would like your Kalasam to be sent to your home address, please fill in the form below and send it to us with your payment.**

# கலசம்
## KALASAM

இலவச காலாண்டிதழ்

**கலசம் உங்கள் வீடுதேடி வரவேண்டுமா?**

இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்!

பெயர் :..............................................................

முகவரி :............................................................

..............................................................

..............................................................

..............................................................

Donation: £.................

Postage: £..................

Total £.

Kalasam
2 Salisbury Road
Manor Park
London E12 6AB
kalasam@hotmail.com

Postage and admin : £10 (U.K/Europe) : £ 20 (Rest of the world) (இரு வருடங்களுக்கு)






6 Kumars
Silk House
Specialist in Wedding Bridal Collection
The First & Best Tamil Silk House in London
A 6 Kumars
Gold House
285 - 287A High Street North,
Manor Park (Eastham),
London E12 6SL
Tel/ Fax: 020 8471 5742
www.6kumarsuk.com
சுத்தமான 22 கரட் சிங்கப்பூர்
தங்கநகைகள் கிடைக்கும் ஒரே இடம்
தலை நகரில் முகூர்த்த பட்டுப்புடவைக்கு
ராசியான ஒரே இடம்
Quality customer services since 1982

இலங்கை யாழ்ப்பாணம் கீரிமலை திருவருள்மிகு நகுலாம்பிகா சமேத
நகுலேஸ்வரஸ்வாமி ஜீர்னோத்தாரண அஷ்ட பந்தன பிரதிஷ்டா

# மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

திங்கட்கிழமை 06.02.2012



## கிரியா நிகழ்ச்சிகள்

கரவருடம் தை மாதம் 15ம் திகதி (29.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 7மணி 36நிமிஷமளவில் பிரதான சிவாசாரியர் சர்வமங்கள வாத்ய கோஷத்தோடு ஆலயத்துக்கு எழுந்தருளல்.

விநாயக வழிபாடு: சாங்கோபாங்க, பிரத்யங்காங்க, அனுக்ஞை, தனபூஜை, திரவியசுத்தி, திரவிய விபாகம், முகூர்த்த பத்திரிகாபடனம், திருமுறை ஓதுதல்.

தைமாதம் 16ம் திகதி 30.01.2012 திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு கணபதி ஹோமம் பேரீதாடனம், பிரம்மச்சாரிபூஜை, கணபதி உபநிஷத் பாராயணம், விநாயகர்கவல் ஓதுதல், பிள்ளையார் கீத ஆலாபனை.

மாலை 5.00 மணி கிராமசாந்தி, பிரவேசபலி, திக்பால வேதமந்திரபாராயணம், பன்னிரு திருமுறை ஓதுதல்.

தைமாதம் 17ம் திகதி (31.01.2012) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு நவக்கிரகமகம் நவக்கிரக சூக்த நட்சத்திர அஷ்ட வாக்ய பாராயணம், கோளறுபதிகம் ஓதுதல்.

மாலை 5.00 மணிக்கு ரட்சோக்னஹோமம், திசாஹோமம், ரட்சோக்னசூக்த பஞ்ச சாந்தி, கோஷசாந்தி பாராயணம், புராணபடனம்.

தைமாதம் 18ம் திகதி (01.02.2012) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு சாந்திஹோமம், பிரம்மசூக்த விஷ்ணு சூக்த ருத்ர சூக்த பாராயணம், புராணபடனம்.

மாலை 5.00 மணிக்கு மூர்த்திஹோமம் ஸ்ரீருத்ரசமக ஸ்ரீசூக்தபாராயணம் – புராணபடனம்.

தைமாதம் 19ம் திகதி (02.02.2012) வியாழக்கிழமை காலை சம்ஹிதா ஹோமம் ருத்ரஹோமம் மகாந்நியாச பாராயணம், பன்னிரு திருமுறை ஓதுதல்.

மாலை 5.00 மணிக்கு உத்தமோத்தம வாஸ்துசாந்தி ப்ராக்னிகரணம் புருஷ சூக்த பாராயணம், – புராணபடனம்.

# படித்தவர் பகன்றவை

கலசம் ஆடி இதழ் பார்த்தேன். சில கருத்துக்கள் என்னைக் கவர்ந்தன.

1. நாராயணன் என்பதற்கே கருத்து உண்டு (இமயம் கட்டுரை) என்பது எனக்கு இதுவரை தெரியாது. முதற்கண் என்னுடைய நன்றி. இவ்வாறு எத்தனையோ சமஸ்கிருதம் கலந்த சொற்களும் பெயர்களும் உள. உன்னித்துப் பார்த்தால் பொருள் விளங்கும். சரபாணி என்ற பெயருடைய ஒருவரைச் சந்தித்தேன். பெயரின் பொருள்கேட்டேன். அவர் வங்காளத்தைச் சேர்ந்தவர், பொருள் தெரியாது என்றார். சரம் என்றால் அம்பு, பாணி என்றால் கையிலே தரித்தவர் - அம்பைக் கையில் ஏந்தியவார் சரபாணி என்றேன். அவர் திகைத்துவிட்டார்.

2. காலணிகளும் கண்ணீரும் தலையங்கம். இதில் கலாசார முரண்பாட்டால் சிக்கல் இருக்கிறது. இந்நாட்டவர் தம்முடைய கிறித்துவ ஆலயங்களில் வழிபடும்போது காலணி அணிந்திருப்பார்கள், நாம் எம் கோயில்களிலே அணிவதில்லை. கிறித்தவர்களின் திருமணங்களும் இறுதிக் கிரியைகளும் சர்ச்சுகளிலேயே நடக்கும். நாம் கோயிலிலே திருமணம் செய்வோம், ஆனால் இறுதிக் கிரியை செய்வதில்லை. நாம் இந்நாட்டவர்போல ஆடைகளை அணிவதனால் காலணியையும் அவர்கள் போலவே நிகழ்ச்சிகளுக்கு போகும்போது ஆடை களுக்கு ஏற்றாற்போல அணிகிறோம். இதனால் நாமே நமக்கு சிக்கல்களை வருவித்துக்கொள்ளுகிறோம். இதற்கான தீர்வு என்னவென்பது எனக்குத் தெரியவில்லை.

**திரு ஆ பாஸ்கரன் தேம்ஸ்டிட்டன்**

---

தங்கள் தலையங்கம் படித்தேன். நச்சென்று எழுதியிருக்கிறீர்கள். சில விடயங்களை நேரே சொல்லவேண்டும். காலணி விடயம் என்னை எப்போதும் உறுத்தும் விடயம். சுத்தமான, தெய்விகமான இடத்தில் காலணி அணிவது தவறு. இதை அழகாக எழுதியமையைப் பாராட் டுகிறேன்.

**திரு நா சூரி - ஹிலிங்டன்**

---

உங்களுடைய கலசம் பத்திரிகையில் தலையங்கம் பார்த்தேன். கல்யாண மேடைகளில் காலணியுடன் நானும் சென்றிருக்கிறேன். எனக்கு விளக்கமோ விவரமோ தெரியாததால் இந்தக் குழப்பம். மற்றவர்கள் போகும்போது நாமும் போவது சரியென்றே நினைத்தேன். இனிமேல் இதைக் கவனிப்பேன்.

**திரு கேதீஸ்வரன் கொலியர்ஸ்வூட்**

---

அடியேன் தற்பொழுது இங்கிலாந்தில் இருக்கிறேன். இலக்கிய, சமய சம்பந்தமான சஞ்சிகைகளை வாசிப்பது விருப்பம். அதனால் என்னுடைய பெறாமகன் உங்கள் வெளியீடான அருமையான சஞ்சிகை - 'கலசம்' மணி 19 - ஒலி 70 தந்துதவினார். அதைப் படித்து மிக மகிழ்ச்சியடைந்தேன். முக்கியமாக, பின்வரும் விடயம் கூற விரும்புகிறேன்.

இடைக்காடு சயம்பு எழுதிய திருப்புகலூரில் நடந்த திரிபுவழிபாடு என்ற கட்டுரை என் மனதைக் கவர்ந்ததுடன் மனச் சாந்தியையும் தந்தது. மிக நன்றி.

முன்பு கீ வா அவர்கள் எழுதிய 'வாருங்கள் பார்க்கலாம்' என்ற நூலில் இவ்விடயம்பற்றி எழுதியிருந்தார். எமக்கு மானச குருவான அப்பரடிகளைப்பற்றி இப்படித் தமிழ்நாடு (உலகம்) கருதியது பெரும் குறையாக இருந்தது. சமயப் பணி செய்யும் எத்தனையோ ஆதீனங்கள் இருந்தும் இந்தத் தவறைத் திருத்த முயலாது இருந்தமை இன்றுவரை என் மனதில் இருந்த ஒரு

கவலை. இன்று உங்கள் சஞ்சிகையைப் படித்ததும் மிகவும் மகிழ்ச்சி. என்னுடைய 83ஆவது வயதில் இப்படி ஒரு மகிழ்ச்சியைத் தந்த உங்கள் 'கலசம்' மேலும் சேவை செய்யவும் ஆசிரியர் மேலும் பல சமயக் கட்டுரைகளை எழுதவும் இறைவன் அருள்புரிக.

மேலும் திரு பத்மநாப ஐயர் அவர்கள் எழுதிய தவில் சக்கரவர்த்தி தட்சணாமூர்த்தி கட்டுரையை மிகவும் திறம்பட எழுதியுள்ளார். பெரியவர்களை, அறிஞர்களைப்பற்றி முழுமையான தகவல்கள் இல்லையென்பது ஒரு பெரிய குறை. இப்படி அறிஞர்கள் விவரங்களை எழுதுவதால் சரித்திரங்கள் பேணப்படும். இதுபோல மணி 17 ஒலி 63இல் வித்துவான் சிவாநந்தையர் பற்றி திரு க உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள் எழுதிய கட்டுரை மிகவும் முக்கியமான ஒரு தகவல். 'பாம்பின் கால் பாம்பே அறியும்' என்பதைப்போல் கட்டுரை எழுதியவர் மிகவும் சிறந்த அறிஞர். ஏழாலை மு கந்தையா போன்ற பெரியாரால் போற்றப்பட்டவர். அவர் மூலம் இப்படி பெரியவர்களுடைய வரலாறுகளை சேமிப்பது பின்வரும் சந்ததியாருக்குப் பிரயோசனமாகும். வரத்தலவிளான் வித்துவான் கணேச ஐயரும் இராமாயணத்திலுள்ள இடைச்சொருகல் பாடல்களைத் திருத்தியமை அன்று தமிழ்ப் பேராசிரியர்களாற் போற்றப்பட்டது. அந்நூலை திரு பிரசாந்தன் (கம்பன் கழகம்) அவர்கள் வெளியட்டுள்ளார். பொதுவாக எல்லாக் கட்டுரைகளும் ஆக்கபூர்வமானவை. உங்கள் சேவைக்கு நன்றி.

**ஆ இராசரத்தினம்**
**இளைப்பாறிய பிரதி கணக்காளர் நாயகம் ஹரோ**

# கடலை மாலை



எனக்கு குரு திசை நடைபெறுகிறது. வியாழக்கிழமை தோறும் தட்சணாமூர்த்திக்கு கொண்டைக் கடலை மாலை போடுகிறேன். அந்த மாலையில் எத்தனை கொண்டைக் கடலை இருக்க வேண்டும்?

கொண்டைக்கடலை மாலை போடுவதில் எனக்கு உடன்பாடு கிடையாது. அதற்குப் பதில் சுண்டல் செய்து நிவேதனம் பண்ணி நீங்களும் உண்டு பிற பத்தர்களுக்கும் விநியோகம் செய்யுங்கள். உணவுப் பண்டங்களை இறைவனுக்கு நிவேதனம் செய்வது வழக்கம். இப்பொழுது புதிது புதிதாக ஜிலேபி மாலை, லட்டு மாலை என்றெல்லாம் சாமிக்குப் போடுகிறார்கள். இந்தப் பழக்கம் இப்படியே வளர்ந்துகொண்டே போனால் இளைய தலைமுறை பீட்சா மாலை, பேர்கர் மாலை என ஆரம்பித்துவிடுவார்கள்

**நன்றி: கல்கி ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன் கேள்வி பதில் பகுதி**
**தகவல்: லண்டன் சபரி**


S. SATHA & Co
SOLICITORS
Estd. 1997
www.satha.co.uk
We are authorised by the Legal Service Commission to undertake the following work under the Legal Aid Scheme.
Police Station Representation
Criminal Defence Services in Court
Prison Law
Asylum and Immigration Law
Employment Law
And other areas...
THE LAW SOCIETY ACCREDITED Criminal Litigation
THE LAW SOCIETY ACCREDITED Immigration Law
THE LAW SOCIETY ACCREDITED Family Law Advanced
Community Legal Service
Criminal Defence Service
In an emergency call - 07956 288 671
This firm also undertakes privately funded work in areas of law as listed above which is in addition to the following areas:
Commercial & Residential Conveyancing
Civil Litigation | Landlord & Tenant | Wills & Probate
S. Satha & Co. Solicitors
376-378 High Street North
Manor Park, London E12 6PH
Tel 020 8471 9484 DX 133012 UPTON PARK 2
Fax 020 8471 9485 Email info@satha.co.uk
Expert Legal Services

ஆலய வழிபாடுகள் ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டவை. ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட ஆலயங்களில் ஆகம விதிமுறைகளுக்கு மாறாது பணியாற்றவேண்டும் என்பதில் சிவாசாரியர்கள், அறங்காவலர்கள், உபயகாரர்கள், அடியார்கள் அசையாத நம்பிக்கை கொண்டவர்கள். 'மேலை நாடுகளில் முறையாகவா கோயில் கட்டப்பட்டுள்ளது?' என்று ஒரு சிலர் கேள்வி கேட்பதுண்டு. அவர்கள் ஒன்றை நினைக்கவேண்டும். ஏதோ கிடைக்கும் இடத்திலாவது அதிகூடிய அளவுக்கு ஆகம விதியைப் பின்பற்ற முயற்சி எடுக்கிறோம்

உண்மையான சைவத்தமிழர் எப்போதும் வேதாகம செயல்களை வரவேற்று வாழ்ந்து வந்துள்ளனர். தொல்காப்பியம் வேதத்தை அந்தணர் மறை என்று கூறுகிறது. இதேபோலத் திருக்குறளும் குறிப்பிடுகின்றது. சிலப்பதி காரத்தில், "மாமுது பார்ப்பான் மறைவழி காட்ட" கண்ணகியின் திருமணம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. தேவாரம் வேதசாரம் என்பதற்கு ஏற்ப திரு முறைகள் யாவும் வேதாகமங்களைப் போற்றி வந்துள்ளன என்பது அனைவரும் அறிந்ததே. தேவாரத்தைப் பாடி பூசை செய்யலாம் என்பவர்கள் ஏன் திருமுறைகள் போற்றும்

# ஆலய வழிபாடும் வேதாகம நெறியும்

**சைவப் புலவர், சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ பா வசந்தன் குருக்கள்**
**கற்பக விநாயகர் கோயில் வால்தம்ஸ்ரோ**

என்று மகிழவேண்டும். ஆகமம் சாராத வழிபாடுகளும் உள்ளன. அவை ஆலயங் களுக்கு வெளியே பல்வேறு நபர்களாற் செய்யப்படுகின்றன. ஆனால் அவை தொடர்ந்து பரம்பரை பரம்பரையாக நடக்கும் என்று கூற முடியாது.

சைவத் திருக்கோயில்கள் பாரம்பரிய பெருமை உடையவை. திருக்கோயில்களில் உள்ள திருமேனிகள் மந்திரங்களாலும் ஆகம செயல்களாலும் உருவேற்றப்பட்டவை. வேத வேள்விகள் இறைவனையும் தேவர்களையும திருப்திப்படுத்தும் தேவகாரியங்கள். தினமும் நடைபெறும் நித்திய, நைமித்திய வழிபாடு களால் தெய்வத் திருமேனிகள் சாந்நித்தியம் பெறுகின்றன. வேத மந்திரங்கள் இறை சாந்நித்தியத்தையும் ஆகம செயல்கள் பிரகா சத்தையும் மேம்படுத்துபவை. இவ்விரண்டையும் பேணிப் பாதுகாப்பது சைவ சமயச் சான்றோர்களுடைய கடமையாகும். இந்த விடயத்தில் மரபு மீறலை ஏற்படுத்தி சைவ மூலநூல்களை அவமதிக்கும் செயலுக்கு நாம் துணைபோகக்கூடாது. வேதங்களும் ஆகமங்களும் வடமொழியில் இருக்கின்றன என்பதற்காக நாம் வேத, ஆகமங்களைப் பழித்துக் கூறலாமா? அப்படியாயின் இறைவன் சொன்னதைப் பழிக்கும் குற்றத்துக்கு ஆளாகமாட்டோமா?

வேதாகமங்களை வேண்டாம் என்கிறார்கள், வெறுக்கிறார்கள்? எம்முடைய தாய் மொழி தமிழ் என்றால் சைவத்தைப் பொறுத்த அளவில் எம்முடைய தகப்பன் மொழி வடமொழியாகும். தாய் மட்டும் போதும், தகப்பன் வேண்டாம் என்று சொல்வது போலத்தான் தமிழிலே பூஜை செய்தாற் போதும், விளங்காத வடமொழி வேண்டாம் என்று கூறும் குழுக்களின் கருத்தாகும்.

வேதவேள்வியை நிந்தனை செய்பவர்களைச் சம்பந்தர் வெறுக்கிறார்.

**"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்**
**ஆதமில்லி அமணொடு தேரரை**
**வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே......"**

தன்னைத் தமிழ் வல்லான் என்று கூறிய சம்பந்தர் வேத, ஆகம மரபை மறுக்கவில்லை. வேதாகமங்கள் வெறுத்த சமணரையும் தேரரையும் பதிகந்தோறும் பத்தாவது தேவாரத்தில் மாசு மெய்யர், மண்டைத் தேரர், குண்டர் என பல்வேறு நிலையிலே சாடுகின்றார். நாம் வேதாகமங்களைப் புறந்தள்ளி, திருமுறைகளைப் போற்றிப் பயனில்லை.

தமிழும் வடமொழியும் இரு கண்கள். ஒரு கண்ணைத் தோண்டி எடுக்க முயற்சி செய்யாதீர்கள். திருமூலருடைய, "என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை

நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்ற இரு வரிகளை ஒருசில தமிழ் வழிபாட்டு விரும்பிகள் அடிக்கடி கூறுவர். ஆனால் அவர்கள் ஏன் திருமந்திரத்தில் உள்ள ஏனைய பாடல்களை பார்க்காமல் இருக்கிறார்கள்? "வேதத்தை விட்ட அறம் இல்லை" என்று கூறுவதுடன் வேதாகமத்தைப்பற்றி பல வரிகள் இருக்கின்றன என்று தெரிந்தும் தெரியாதவர்கள் போல நடிக்கிறார்கள். திருமூலர் வேதம், ஆகமம் பற்றி தனித் தலைப்புக் கொடுத்துள்ளார். தமிழும் வடமொழியும் அவனை உணர்த்தலும் உணரலுமாமே என்று கூறுகிறார்.

இந்தியாவில் கடவுள் நம்பிக்கையற்ற ஒரு சிலர் ஆரியமொழி என்று வடமொழியையும் அதைப் போற்றும் அந்தணர்களையும் முதலிலே சொல்மழை கொண்டு தாக்கினார்கள். பின்பு கடவுள் இருந்தால் இருக்கட்டும், அவரைத் தமிழிற் பாருங்கள், வடமொழியும் ஐயரும் வேண்டாம் என்றார்கள். இந்த நம்பிக்கை அற்றவர்களின் கதைகளைக் கேட்டு நாம் எம் மரபுகளை அழிக்கவேண்டுமோ? திருமுறைகளைப் போற்றுபவர்கள் வடமொழி, வேதாகம நெறிகளை ஆலய வழிபாட்டு முறைகளிலே பின்பற்றியேயாகவேண்டும். இல்லையேல் அவர்கள் திருமுறைகளையும் மதிக்கவில்லை என்றே பொருள்படும்.

# சாஸ்திரம் - காஞ்சிப் பெரியவர்

சாஸ்திர விஷயங்களில் கொஞ்சம் கொஞ்சம் விட்டுக்கொடுப்பது என்று வந்தால் கூட கடைசியில் வெறும் லௌகிக சௌகரியத்தை மட்டும் அநுசரிக்கும் படிதான் ஏற்பட்டுவிடும். சிலர் நல்லெண்ணத்துடனேயே என்னிடம் வந்து, "தர்மசாஸ்திரங்களை ரிஷிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நீங்களும் ரிஷிமாதிரி இருக்கிறீர்கள். அதனால் காலத்துக்குத் தகுந்தபடி சாஸ்திரங்களை மாற்றிக் கொள்ளுங்கள்" என்று கேட்கிறார்கள். வயலில் களை எடுப்பதுபோல இப்பொழுது காலநிலையை அநுசரித்துச் சில ஆசார தர்மங்களை எடுத்து விடவேண்டும் என்பது இவர்கள் அபிப்பிராயம். இப்போது சிலவற்றைக் களையென்று நினைத்து நான் எடுத்தால், இன்னுங் கொஞ்சக் காலத்துக்குப் பின் இன்னொருத்தர் வேறு சில ஆசாரங்களைக் 'களை' எடுக்கலாம். இப்படியே போய்க்கொண்டிருந்தால், எது பயிர், எது களை என்கிற விவஸ்தை இல்லாமல் வயல் முழுவதுமே போய்விடும்.

ரிஷிகள் ஏதோ சொந்த அபிப்பிராயத்திலே சொன்னார்கள் என்பதற்காக தர்மசாஸ்திரத்தை நாம் அநுசரிக்கவில்லை என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். என்றைக்கும் மாறாமல் சாசுவதமாக இருக்கும் ஈசுவர ஆக்ஞையான வேதத்தை அநுசரித்தே ரிஷிகள் இந்த விதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதாலேதான் இவற்றைப் பின்பற்றுகிறோம். அதை உள்ளபடி ரட்சிக்கத்தான் பிரயத்தனப்படவேண்டுமேயன்றி மாறுதல் செய்வதற்கு எனக்கு அதிகாரம் இல்லை.

சாஸ்திரப் பிரகாரம் நடப்பது இந்தக் காலத்தில் சாத்தியமே இல்லையென்று நினைத்துவிடக்கூடாது. வியாபாரவேகத்தில் வளர்ந்துவிட்ட லௌகிக நாகரிகத்தை விட்டு விட்டு தேவைகளைக் குறைத்துக் கொண்டால் யாருமே இப்படி ஆசாரங்களை விட்டுப் பணத்துக்காக பறக்கவேண்டியதில்லை. பணத்துக்காப் பறக்காதபோது பகவத் ஸ்மரணத்துக்கு நிறைய அவகாசம் கிடைக்கும். வாழ்க்கையில் நிம்மதியும் திருப்தியும் சௌக்கியமும் தன்னால் உண்டாகும்.

அறம் பொருள் இன்பம் வீடு என்கிற நாலு வாழ்க்கைப் பயன்களில் இன்பத்தை மட்டும் தேடி அதற்காகப் பொருளுக்கு அலைந்து கொண்டிருக்கிறோம். இதை மாற்றி வீட்டுக்காக (மோட்சத்துக்காக) அறத்தின் (தர்மம்) மூலம் பாடுபடவேண்டும். வாழ்க்கையை எளியதாக்கிக் கொண்டால் பொருளுக்காக அலைய வேண்டாம். அறங்களை அப்போது பின்பற்ற முடியும். அறத்தின் பயனாக கிடைக்கிற பேரானந்த வீட்டையும் பெறமுடியும்.

**நன்றி கல்கி**

**தகவல் லண்டன் சபரி**

மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் இருக்கும் சைவ ஆலயங்களுள் முதன்முதல் ஆரம்பிக்கப்பட்டது பொய்யாத விநாயகர் மூர்த்தி கோயில். 230 ஆண்டுகளுக்கு மேலாக மலேசியாவின் தென்மேற்குக் கரையிலுள்ள மலாக்காவில் பொய்யாத விநாயகர் அருளாட்சி செய்துவருகிறார். மலேசிய நாடு தோன்றியதே மலாக்காவிலேதான். 'சிட்டிகள்' என்ற சமூகத்தினரின் பாரம்பரியப் பொக்கிஷம் பொய்யாத விநாயகர் மூர்த்தி கோயில்.

1781ஆம் ஆண்டில் தெய்வநாயகம் என்ற சிட்டி சமூகப்பெரியார் டச்சு அரசால் வழங்கப்பட்ட காணியில் மலேசிய நாட்டின் முதலாவது சைவ ஆலயத்தை நிறுவினார். கோயிலைச் சுற்றி நன்கொடையாக வழங்கப்பட்ட காணிகளில் பல சிட்டிக் குடும்பங்கள் குடியேறின. காலப்போக்கில் இன்னும் பல ஆலயங்கள், குறிப்பாக, கயிலாசநாதர், மகாமாரி, அங்காளம்மன், பரமேஸ்வரி கோயில்கள் நிறுவப்பட்டன. முதலில் புலம்பெயர்ந்த மூத்த மகன் பெற்றோரை வரவழைத்த கதைதான். ஆலயங்கள் இருக்கும் கஜாபெராங் (Gajah Perang) பகுதி தம்முடைய மூதாதையரின் ஊரான காஞ்சிபுரத்தைக் குறிக்கின்றது என்று சிட்டிகள் பெருமைப்படுகின்றனர்.

# பொய்யாத விநாயகர் மூர்த்தி - மலாக்கா

டாக்டர் க சிவகுமார்

பொய்யாத விநாயகர் மூர்த்தி கோயில் பரந்த முகப்புடையது. கோபுரம் உயர்ந்ததல்ல. திராவிட முறையில் அமைக்கப்பெற்ற சைவக் கோயில்களில் பல்லடுக்குக் கோபுரம் இருக்கும். இங்கு மூன்று தளங்கள்தான். நமது பாரம்பரியக் கோயில் கோபுரங்களில் இறைவனுடைய திருவிளையாடல்களைச் சித்திரிக்கும் ஏராளமான சிற்பங்கள் காணப்படும். இங்கு ஒவ்வொரு தளத்திலும் ஒரேயொரு திருவுருவம். கோயிலின் வாசலில் ஒரு பக்கத்தில் ஆலயத்தின் ஆரம்பத்தையும் உரிமையையும் பறைசாற்றும் அறிவித்தல் பலகை. தமிழுக்கு இதில் முதலிடம். அதன் கீழ் மலாய் மொழி. அதற்கும் கீழ் ஆங்கிலம்.

உள்ளே நுழைந்ததும் மூலஸ்தானம் தெரிகிறது. அங்கு வெகு நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்ட ஐங்கரனின் திருவுருவம். வெள்ளித் திருவாசி வெகுதூரம் பளிச்செனத் தெரிகிறது. நெற்றியில் திருநீற்றுப் பட்டை. அதன் நடுவில் சிந்தூர திலகம். அதன் கீழ் சந்தனம். அகன்ற இரு விழிகள், ஒரு பக்கம் நீண்ட தந்தம், மறுபுறம் எஞ்சிய எயிறு. இவை நாற்கோணத்தில் அமைந்து நம் மனதைச் சற்று உலுப்பி, 'கார்நிற மேனிக் கற்பகக் களிற்றின்'பால் ஈர்க்கின்றன. மாணிக்க ஆரமும், மார்பில் நிறைவான



பதக்கமும், சந்தன நிறப் பீதாம்பரமும் அகன்ற தோள்களை அலங்கரிக்கும் சால்வையை மேலும் அழகு செய்யும் மலர் மாலைகளும் பொய்யாத விநாயகரின் பொலிவான தோற்றத்துக்கு மெருகூட்டுகின்றன. இரு மருங்கிலும் தூண்டா மணிவிளக்குக்கள். தூயவனின் தோற்றத்தை அவை துலங்கச்


செய்கின்றன. சுற்றுப் பிரகாரத்தில் சிவலிங்கம், முருகப்பெருமான், மதுரை மீனாட்சி ஆகிய தெய்வங்களுக்கான விசேட சந்நிதிகள் ஆலயத்தின் சிறப்புக்கு மேலும் அழகு சேர்க்கின்றன. தமிழைச் சரிவரப் பேசத் தெரியாத சிவாசாரியார் பயபத்தியுடன் அர்ச்சனை செய்துகொடுக்கிறார். அது எந்த மொழியென்று சரியாகப் புரியவில்லை. கோயில் நிருவாகத்தை பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்குப் பொறுப்புக் கொடுத்திருக் கிறார்கள். இருந்தாலும் சிட்டிகள் இவ்வாலயம் தம் முன்னோர் தமக்களித்த அருஞ்செல்வம் என்பதை நிலைநாட்டத் தவறுவதில்லை.

### மலாக்காவின் தோற்றம்:


1396ஆம் ஆண்டளவில் பரமேஸ்வரா எனும் சைவ அரசனால் மலாக்கா தாபிக்கப்பட்டது. அவர் இந்தியாவின் கேரளப் பகுதியிலிருந்து கடல்வழி சென்று சுமாத்திராவில் ஆட்சி செய்து பின் புதுநிலம் தேடிப் புறப்பட்டார். அவர் வந்து இறங்கி ஒரு மரத்தடியில் இளைப்பாறிக் கொண்டு இருந்தபொழுது வேட்டை நாய்களுள் ஒன்றை, சின்னஞ்சிறு மான்போன்ற ஓர் எலி தனது பின்கால்களால் எட்டி உதைத்ததைப் பார்த்து வியந்த அவர் அந்நிலத்துக்கு நிழல்கொடுத்த மரத்தின் பெயரான மலாக்கா என்ற நாமத்தைச் சூட்டினார். பரமேஸ்வரா 1414ஆம் ஆண்டில் இஸ்லாமிய இளவரசி ஒருத்தியை மணஞ்செய்து தானும் மதம் மாறி, தன் பெயரையும் இஷ்கின்டர் ஷா என மாற்றிக்கொண்டார். மேற்கில் பாரதத்தையும் யவனநாடுகளையும் கிழக்கில் சீனாவையும் கொண்ட ஒரு கேந்திர ஸ்தானமாக மலாக்கா வணிகத்தில் விரைவில் வளர்ந்தது. பத்மநாதபுர அரண்மனை, பலவிதங்களில், முக்கியமாக மரவேலைப்பாட்டிலும் கூரை அமைப்பிலும் மலாக்கா சுல்தான் வாழ்ந்த அரண்மனையை ஒத்திருப்பதை இன்றும் காணலாம். போர்த்துக்கேயருக்குப்பின், டச்சுக்காரரும் தொடர்ந்த ஆங்கிலேயரும் ஆட்சி செய்தபின் 1957ஆம் ஆண்டு மலாயா சுதந்திரம் பெற்றது. தலைவர் துங்கு அப்துல் ரஹ்மான் அவர்கள் இங்கிலாந்து சென்று நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின் நாடு திரும்பியபோது சுதந்திரம் பற்றி முதலில் அறிவித்தது மலாக்காவிலேதான்.

### சிட்டிகளா? செட்டிகளா?

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்றனர் முன்னோர்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் நாட்டுக்கும் மலேயாக் குட-ரநாட்டுக்கும் வர்த்தக, கலாசாரத் தொடர்புகள் இருந்திருக்கின்றன. அந்த வகையில் 15ஆம் நூற்றாண்டில் சோழமண்டலத்திலிருந்து (Coromondel) வந்த வணிகர் காலப்போக்கில் மலாய சீனப் பெண்களை மணமுடித்து மலாக்காவைத் தம்முடைய நிரந்தர வதிவிடம் ஆக்கிக்கொண்டனர். அக் காலகட்டத்தில் சுல்தான் ஆட்சி விழுந்து போர்த்துக்கேயரின் ஆதிக்கம் ஆரம்பமாகியது. அந்நியர் ஆதிக்கம் வலுவடைந்த நாள்களில் செட்டியார் என்ற சொல் 'செட்டி' என்று சுருங்கி, பின் 'சிட்டி' என்று மருவியதாக ஒரு கருத்துண்டு. ஆனால், செட்டிகள் அடகு பிடித்துக் கடன் கொடுப்போர் என்றும், பல்லாண்டுகளுக்கு முன் வந்து



இறங்கிய வணிக் குலத்தின் வழித்தோன்றல்கள் தாமே என்றும் 'சிட்டி'கள் என்ற சமூகத்தினர் இன்றும் தம்முடைய தனித்துவத்தை நிலை நாட்டுகின்றனர். 15ஆம் நூற்றாண்டில் வணிகர்களாக மலாக்கா வந்திறங்கிய அவர்கள் மலாய சீனப் பெண்களை மணஞ்செய்து அவ்வூர்ச் சம்பிரதாயங்கதை் தழுவிக் கொண்டாலும் சமயத்தைப் பொறுத்தமட்டில் சைவத்தைக் கைவிடவேயில்லை. டச்சுக்கா ரர்களின் ஆதிக்கமும் பெருக சிட்டிகளின் தாய்நாட்டுத் தொடர்பு படிப்படியாகக் குறைந்தது. தம்முடைய மொழியும் மலாய் மொழிதான் என்று ஏற்றுக்கொண்டனர். ஆனால், தம் மதம் சைவசமயமே என்ற கருத்து எள்ளளவும் குறையவில்லை.




புலம் பெயர்ந்து வந்திருக்கும் நாம் கவனிக்வேண்டிய விடயங்கள் இதிலே பல உண்டு. புகுந்த நாட்டின் பழக்க வழக்கங்களைப் புலம் பெயர்ந்தோர் கைக்கொண்டாலும் அவர் சந்ததியினர் கலப்புத் திருமணங்கள் செய்தாலும் தமிழையும் தாய் நாட்டையும் மறவாதிருக்க வழி செய்யவேண்டும். தாய் மண்ணுடன் உள்ள தொடர்பு அற்றுப்போகாதிருத்தல் அவசியம். எண்ணற்ற கோயில்களை எழுப்பி, சைவப் பற்றுக் குறையாதிருக்க வழிவகை செய்தாலும் மொரிஷியஸ், பிஜி, மலாக்கா போன்ற நாடு களில் ஏற்பட்ட நிலைமை புலம்பெயர்ந்த நம் இனத்திடையேயும் உருவாகுமோ என்ற ஏக்கம் ஏற்படத்தான் செய்கிறது. இங்குள்ள ஆலயங்களிலே தமிழும் எம்முடைய பாரம்பரிய கலைகளும் கற்பிக்கப்படுவது மெச்சத்தக்கது. சைவ சமயப்பற்றை பேணிக் காக்க முயற்சிக்ள எடுக்கும்போது தாய் மண்ணில் இருக்கும் பஞ்ச ஈஸ்வரங்கள் போன்ற முக்கிய தலங்களைப் பற்றிய அறிவையும் தவறாது இளைய தலைமுறைக்கு ஊட்டவேண்டும்.

கச்சயப்பமுனிவர் அருளி விநாயகர் இட்டகத்திலிருந்து இரு பொன்னான வரிகள்:
'பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்'

***

**எல்லா வயதினருக்கும் யோகாசன வகுப்புக்கள் இங்கே நடைபெறுகின்றன.**

Enlightenment Circle




**Yoga lessons are held here for all age groups**

**Contact our team on : 07830 374780 / 07730 313379.**

# கண்ணனும் தாத்தாவும்

-முத்து-



தாத்தாவின் விருப்பப்படி கண்ணனும் வீட்டிலுள்ள ஏனையோரும் லூயிஷாம் சிவன் கோயிலுக்குப் போய் உமையம்மை சமேதராய் அமர்ந்து பத்தர்களுக்கு அருள்பாலிக்கும் சிவனை வணங்கிவிட்டு வீடு திரும்பினர். கோயிலிலேயே பிரசாதம் உண்டதால் எல்லோரும் வரவேற்பு அறையில் ஆறுதலாக அமர்ந்தனர். தாத்தாவுக்குப் பக்கத்தில் புதினங்கள் கேட்கும் ஆர்வத்தில் அமர்ந்திருக்கிறான் கண்ணன்.

**கண்ணன்:** சிவன் கோயிலுக்குப் போனது உங்களுக்குச் சந்தோஷந்தானே தாத்தா? களைத்துவிட்டீர்களோ?

**தாத்தா:** காரிலேதானே போனோம். களைப்பேயில்லை. மனம்நல்ல மகிழ்ச்சியாக உள்ளது. நல்ல நிறைவாகவும் இருக்கிறது.

**கண்ணன்:** புதுக்கோயிலின் அழகைப் பார்த்து சந்தோஷமாக இருக்கா தாத்தா? அதுதான் நிறைவாக இருக்கிறது என்கிறீர்களா?

**தாத்தா:** 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று ஒளவையார் சொல்லியிருக்கிறார். பத்தியுடன் கோயிலுக்குப் போய் வணங்கிவர மனதில் ஓர் அமைதி, சந்தோஷம், நிம்மதி எல்லாமே வரும். அதனாலேயே அப்படிச் சொன்னேன். கோபுரத்துடன் விளங்கும் சிவன்கோயில் மிக அழகாகவே உள்ளது. முன்பு எல்லா விக்கிரகங்களும் ஒன்றாகவே வைக்கப்பட்டிருந்தன. இப்போ தனித்தனியாக சிறிய சந்நிதிகளில் அமைந்திருப்பது பார்க்க அழகாக இருக்கிறது.

**கண்ணன்:** பெரிய கோபுரம் இருப்பதால் அங்கே ஒரு சைவ ஆலயம் இருப்பதைத் தெரியப்படுத்துகிறது. இல்லையா தாத்தா?

**தாத்தா:** ஆமாம். கம்பீரமாக இருக்கும் கோபுரந்தான் கோயிலுக்கு அழகைக் கொடுக்கிறது. அதிலுள்ள தெய்வ விக்கிரகங்கள் மக்களுக்கு அருள்பாலிக்கவே நாம் இருக்கிறோம் என்று சொல்வதைப்போல இருக்கின்றன. முருகன் கோயில் கோபுரத்துடன் கட்டப்பட்ட பின் வேறு மொழிபேசும் இந்துக்களும். இந்துக்கள் அல்லாத பிற மதத்தினரும் அங்கே வந்து வழிபடுவதைக் காணலாம்.

**கண்ணன்:** பள்ளி மாணவர்களை ஆசிரியர்கள் அழைத்துக்கொண்டு முருகன் கோயிலுக்கு வந்து இந்து சமயத்தைப்பற்றிக் கற்பிக்கிறார்கள். குருக்கள்மாரும் விளக்கம் சொல்கிறார்கள்.

**தாத்தா:** மக்கள் வாழ்க்கைக்குச் சமயம் முக்கியமானது கண்ணா! "பாமரனைப் பண்புள்ளவன் ஆக்குவதும் பண்புள்ளவனை இறைநிலைக்கும் கொண்டு செல்வதும் சமயம்" என்று சுவாமி விவேகானந்தர் சொல்லியிருக்கறார் கண்ணா! அதிலும் இந்து சமயத்தில் மக்கள் தாம் விரும்பியபடி கடவுளை வணங்கலாம். சந்தேகம் வரும்பொழுது கேள்விகள் கேட்டு விளக்கம் பெற்றுக்கொள்ள சுதந்திரம் கொடுத்துள்ளது. எங்களுக்கு வழிகாட்டும் வகையில் வாழ்ந்து காட்டிய மகான்களின் வரலாறுகளைக் கொண்டுள்ளது.

**கண்ணன்:** 'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்' என்று கச்சியப்ப சிவாசாரியார் பாடியது உண்மையாகிவிட்டது தாத்தா! இலண்டனில் எத்தனை கோயில்கள்! அங்கே தேர்த் திருவிழாக்கள்!

**தாத்தா:** ஆமாம் கண்ணா! சரியாகச் சொன்னால் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகள் எல்லாவற்றிலும் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. சைவநீதி உலகெலாம் பரவி மக்களை உய்விக்க வேண்டும்.

**கண்ணன்:** 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்' என்ற பாரதியின் ஆசையும் நிறைவேறிவிட்டது தாத்தா. இனிச் சைவமும் தமிழும் உல கனைத்தும் தழைத்தோங்கும் என்பதிற் சந்தேகம் இல்லை தாத்தா!

**தாத்தா:** கண்ணா! நான்தான் எப்போதும் உனக்கு விளக்கம் சொல்லுவேன். இன்றைக்கு நீயே எனக்கு விளக்கம் சொல்ல ஆரம்பித்துவிட்டாய். கெட்டிக்காரன்.

**கண்ணன்:** வேறு என்ன உங்களுக்குச் சிவன்கோயிலிலே பிடித்த விஷயம்? சொல்லுங்கோ தாத்தா!

**தாத்தா:** சிவன்கோயிலில் மட்டுந்தான் அறுபத்துமூன்று நாயன்மார்களின் திருவுருவச் சிலைகளை வைத்து வழிபடுகிறார்கள். ஆயிரம் வருடங்களுக்கு முன்பு வாழ்ந்து சிவனைப் பாடியும் இறைதொண்டு செய்தும் முடிவில் இறையடி சேர்ந்த சிவனடியார்கள் இவர்கள். சிவன் கோயிலுக்குப் போகும் பத்தர்கள் அவர்களை நினைத்துப் போற்றி வணங்க முடிகிறது.

**கண்ணன்:** இன்னுமொன்று நான் சொல்லட்டுமா தாத்தா?

**தாத்தா:** சரி. சொல் பார்ப்போம்!

**கண்ணன்:** தேவார திருவாசகத் திருமுறைகளைப் பாடுவதற்கென்று ஓர் ஓதுவாமூர்த்தியையும் வைத்திருக்கிறார்கள் தாத்தா!

**தாத்தா:** ஆமாம் கண்ணா, அது ஒரு பாராட்டத்தக்க விஷயம். ஹூயிஷாம் சிவன்கோயிலுக்கு அது இன்னொரு சிறப்பம்சந்தான். கோயிலுக்கு வரும் பத்தர்கள் தேசிகரின் திருமுறைகளைக் கேட்கும்போது தாங்களும் தேவார திருவாசகங்களைப் பாடவேண்டும் என்று ஆவல் கொள்வார்கள்.

**கண்ணன்:** பத்திப் பாடல்களைக் கேட்கக் கேட்க பத்தி தானாகவே வரும். இல்லையா தாத்தா?

**தாத்தா:** கெட்டிக்காரன். அது மிக மிக உண்மையான விடயம்.

**கண்ணன்:** இன்றைக்கு எனக்கொரு தேவாரம் சொல்லித் தாருங்கோ தாத்தா!

**தாத்தா:** சரி கண்ணா! திருஞானசம்பந்தர் பாடிய தேவாரம் ஒன்றைச் சொல்லித்தருகிறேன், பாடு.

**கண்ணன்:** சரி தாத்தா. திருச்சிற்றம்பலம்.

**தாத்தா:** நான் சொல்லமுன்னரே நீ சொல்லிவிட்டாய். நல்லது.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே
(தாத்தா சொல்லிக்கொடுக்க கண்ணன் பாடுகிறான்)

**கண்ணன்:** நல்ல தேவாரம். பாடவும் காதாற் கேட்கவும் இனிமையாக உள்ளது தாத்தா.

**தாத்தா:** தேவாரத்தின் பொருள் விளங்குகிறதா கண்ணா?

**கண்ணன்:** கொஞ்சந்தான் புரிகிறது. நமசிவாய என்ற மந்திரத்தின் பெருமையைச் சொல்கிறது என்று நினைக்கிறேன். சரியா தாத்தா?

**தாத்தா:** சரிதான் கண்ணா! நமசிவய என்பது ஒரு சக்தி வாய்ந்த மந்திரம். இதனைப் பஞ்சாட்சர மந்திரம் என்றும் சொல்வர். பஞ்ச - ஐந்து, அட்சரம் - எழுத்து. ஐந்து எழுத்துக்களைக் கொண்டது. ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு பொருளுண்டு. நீ பெரியவனானதும் அதுபற்றி படித்து அறிந்துகொள்ளலாம். இப்போது நான் தேவாரத்தின் பொருளைச் (கருத்து)சொல்கிறேன். கேள் கண்ணா!

**கண்ணன்:** சரி தாத்தா! சொல்லுங்கோ!

**தாத்தா:** சிவனை வணங்கி முனிவர்கள், ஞானிகள், பத்தர்கள் இந்த மந்திரத்தைச் செபம் பண்ணுவார்கள்.

**கண்ணன்:** செபம் பண்ணுவதென்றால் என்ன தாத்தா?

**தாத்தா:** இந்த மந்திரத்தை 108 முறையோ, 1008 முறையோ தொடர்ந்து மனதிலே சொல்லிச் சிவனைத் தியானிப்பது ஆகும். சில முனிவர்கள் பல நாள்களுக்கு சொல்லித் தியானிப்பதும் உண்டு.

**கண்ணன்:** சரி தாத்தா! காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி என்றால் என்ன?

**தாத்தா:** நிறைந்த அன்புடன் கண்களிலே கண்ணீர் வருமளவுக்கு மனம் உருகி நமசிவாய என்ற மந்திரத்தைச் சொல்லி சிவனைத் தியானம் செய்பவர் நல்ல உயர்ந்த நிலையை அடைவார்கள். ஏனென்றால் இந்து சமயத்தவர் கூறும் நான்கு வேதங்களின் உண்மைகள் அத்தனையும் சிவனின் நாமமாகிய இந்த மந்திரத்துள் அடங்கியிருக்கிறது.

**கண்ணன்:** இந்த மந்திரத்தை மட்டும் சொல்லி வழிபட்டாலே கடவுளை அடையலாம். அப்படித்தானே தாத்தா?

**தாத்தா:** ஆமாம் கண்ணா. ஆனால் கடவுளிடத்தில் மிகுந்த அன்புகொண்டு சொல்லவேண்டும். நிறைய அன்பிருந்தால் மட்டுமே கண்ணீர் வரும்.

**கண்ணன்:** அதெப்படித் தாத்தா?

**தாத்தா:** அது எப்படியென்றால், நீ மிகவும் அன்பாகப் பழகுபவர்கள் பிரியும்போது கண்ணீர் வரும். இல்லையா? உன்னுடைய நண்பர்கள் துன்பம் வந்து அழுதால் நீயும் அழுவாய் அல்லவா? பெருங் கூட்டத்திலே பிள்ளையைத் தவறவிட்ட தாய் அழுவாள். பிள்ளையும் தாயைக் காணவில்லையே என்று அழும். இது எதைக் காட்டுகிறது கண்ணா?

**கண்ணன்:** இது ஒருவரிடம் மற்றவர்க்கு உள்ள அன்பைக் காட்டுகிறது தாத்தா.

**தாத்தா:** திருக்குறளில் அன்புடைமை என்னும் அதிகாரத்திலுள்ள முதற்குறள் கண்ணீருக்கும் அன்புக்குமுள்ள தொடர்பைக் கூறுகிறது கண்ணா! அந்தக் குறள் உனக்குத் தெரியுமா?

**கண்ணன்:** தெரியுமே தாத்தா! சொல்கிறேன், கேளுங்கள். நீங்கள் அதன் கருத்தைச் சொல்லுங்கள்.

அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்

**தாத்தா:** சரியாகச் சொல்லிவிட்டாய். நல்லது. இதன் கருத்து, அன்பை மனத்துக்குள் மூடிவைத்திருக்க முடியாது. ஒருவர் அன்புடையவர் என்பது பிறர்க்குத் துன்பம் வரும்போது தம்மை அறியாமலே கண்ணீர் விடுவதிலிருந்து கண்டுகொள்ளமுடியும். நாங்கள் மனிதரிடத்திலே காட்டும் அன்பைப்போல கடவுளிடமும் அன்பாக இருக்கவேண்டும். அதைத்தான் பத்தி என்று சொல்வர்.

**கண்ணன்:** திருவள்ளுவர் எதையுமே விடவில்லை. மக்களுக்கு வேண்டிய எல்லாவற்றையுமே சொல்லியுள்ளார்.

**தாத்தா:** அதனாலேதான் ஒருவர் திருக்குறளை மட்டும் நன்றாகப் படித்தாலே போதுமானது. அது மக்களை நல்வழிப்படுத்தும்.

**கண்ணன்:** நான் எதைப் படிக்காவிட்டாலும் திருக்குறளை மட்டும் முழுவதும் நன்றாகப் படிப்பேன், என் நண்பர்களையும் படிக்கச்சொல்வேன்.

**தாத்தா:** அப்படித்தான் செய்யவேண்டும். நாங்கள் எங்களுக்குத் தெரிந்த நல்லவற்றை மற்றவர்களுக்கும் சொல்லி நல்வழிப்படுத்தவேண்டும். எனக்கு இப்போது கொஞ்சம் களைப்பாக இருக்கிறது. இந்தச் சோபாவில் கொஞ்சம் கண்ணயரப்போகிறேன்.


**கண்ணன்:** கோயிலுக்குப் போய்வந்ததும் எனக்குக் கதை சொன்னதும் உங்களுக்குக் களைப்பாகிவிட்டது. ஓய்வெடுங்கோ தாத்தா!

**தாத்தா:** சரி கண்ணா! ஐந்து மணிக்கு எழுப்பிவிடு. நான் வானொலியிலே செய்திகள் கேட்கவேண்டும்.

# Hinduism in search of answers...

**HINDU SCRIPTURES (contd) – THE PURAANAS**

The Puraanas mean Ancient Books. Each Puranam is compendium of **Myth, Legend and History.** The Puranas are post-Vedic texts which typically contain a complete narrative of the history of the Universe from creation to destruction, genealogies of the kings, heroes, sages and demigods, and descriptions of Hindu cosmology, philosophy and geography. There are 18 canonical Puranas and also many other works termed Purana, known as **'Upapuranas'.**



They are usually written in the form of stories related by one person to another. They were passed down as oral traditions with numerous local variations, and were written down at different times and places. The materials within individual Puranas show evidence of interpolations and additions. This makes it nearly impossible to assign clear dates to the texts. In general bulk of the material was probably established in the classical and medieval period (500CE) at the end of the Gupta dynasty.

The Mahapuranas are frequently classified according the three aspects of the divine (Trimurti):

**Vaishnava Puranas:** Vishnu Purana, Bhagavata Purana, Nāradeya Purana, Garuda Purana, Padma Purana, Varaha Purana, Vāmana Purana, Kūrma Purana
**Brāhma Puranas:** Brahma Purana, Brahmānda Purana, Brahma Vaivarta Purana, Mārkandeya Purana, Bhavishya Purana,

**Śaiva Puranas:** Shiva Purana, Linga Purana, Skanda Purana, Agni Purana, Vāyu Purana

Puranas are also classified according to qualification of persons who can understand them: "Puraanas are supplementary explanations of the Vedas intended for different types of men. All men are not equal. There are men who are



conducted by the mode of goodness, others who are under the mode of passion and others who are under the mode of ignorance. The Puraanas are so divided that any class of men can take advantage of them and gradually regain their lost position and get out of the hard struggle for existence." (according to Srimat Bhagavatam)

According to the Padma Purana, the texts may be classified in accordance with the three gunas or qualities: truth, passion, and indifference:

**Sattva ("purity"):** Vishnu Purana, Bhagavata Purana, Naradeya Purana, Garuda Purana, Padma Purana, Varaha Purana

**Rajas ("passion"):** Brahmanda Purana, Brahma Vaivarta Purana, Markandeya Purana, Bhavishya Purana, Vamana Purana, Brahma Purana

**Tamas ("ignorance"):** Matsya Purana, Kurma purana, Linga Purana, Shiva Purana, Skanda Purana, Agni Purana

The Puranas were written to popularise the religion of the Vedas. They contain the essence of the Vedas. The aim of the Puranas is to impress on the minds of the masses the teachings of the Vedas and to generate in them devotion to God, through concrete examples, myths, stories, legends, lives of saints, kings and great men, allegories and chronicles of great historical events. The sages made use of these things to illustrate the eternal principles of religion. The Puranas were meant, not for the scholars, but for the ordinary people who could not understand high philosophy and who could not study the Vedas.

They are very interesting to read and are full of information of all kinds. Children hear the stories from their grandmothers. Pundits and Purohits hold Kathas or religious discourses in temples, on banks of rivers and in other important places. Agriculturists, labourers and bazaar people hear the stories.

**Puranas usually have five aspects (Pancha Lakshana)**

- **Creation of the world**
- **Dissolution of the world**
- **Ages of the world**
- **Geneologies**
- **Stories about descendants of dynasties**

**Other topics covered are:**

- **Four aims of life**
- **Religious observance – Virata (Fasts)**
- **Rites for dead – Shradda**
- **Descriptions of places for pilgrimage (Theertha)**
- **Gifts/Charity (Dhaana)**
- **Means of subsistence**
- **Manifestation of higher beings**
- **Liberation from birth**
- **Brahman as underlying support of Cosmos**


There are many **'Sthala puranas'**, and **'Upa puranas'**, associated with temples and deities, describing the history and miracles of God.



The most popular Purana is the Srimad Bhagavata Purana. Next comes Vishnu **Purana**. A portion of the **Markandeya Purana** is well known to all Hindus as Chandi, or **Devi Mahatmyam**. Worship of God as the Divine Mother is its theme. **Devi Mahatmyam** is read widely by the Hindus on sacred days and **Navaratri (Durga Puja) days.**

**Ten Avataras of Vishnu and their purposes:**

The Srimad Bhagavata Purana is a chronicle of the various Avataras of Lord Vishnu. There are ten Avataras of Vishnu. The aim of every Avatara is to save the world from some great danger, to destroy the wicked and protect the virtuous.



The ten Avataras are: **Matsya (The Fish), Kurma (The Tortoise), Varaha (The Boar), Narasimha (The Man-Lion), Vamana (The Dwarf), Parasurama (Rama with the axe, the destroyer of the Kshatriya race), Ramachandra (the hero of the Ramayana and the son of Dasaratha, who destroyed Ravana), Sri Krishna, the teacher of the Gita, Buddha (the prince-ascetic, founder of Buddhism), and Kalki (the hero riding on a white horse, who is to come at the end of the Kali-Yuga).**

The ten best known avatars of Vishnu are collectively known as the **Dasavatara.** This list is included in the **Garuda Purana**


The first four are said to have appeared in the **Satya Yuga** The next three avatars

appeared in the **Treta Yuga,** the eighth descent in the **Dwapara Yuga** and the ninth in the **Kali Yuga**. The tenth, Kalki, is predicted to appear at the end of the Kali Yuga.

1. The object of the **Matsya Avatara** was to save Vaivasvata Manu from destruction by a deluge.

2. The object of **Kurma Avatara** was to enable the world to recover some precious things which were lost in the deluge. The Kurma gave its back for keeping the churning rod when the Gods and the Asuras churned the ocean of milk.

3. The purpose of Varaha Avatara was to rescue, from the waters, the earth which had been dragged down by a demon named Hiranyaksha.




4. The purpose of Narasimha Avatara, half-lion and half-man, was to free the world from the oppression of Hiranyakasipu, a demon, the father of Bhakta Prahlada.

5. The object of Vamana Avatara was to restore the power of the gods which had

been eclipsed by the penance and devotion of King Bali.
6. The object of Parasurama Avatara was to deliver the country from the oppression of the Kshatriya rulers. Parasurama destroyed the Kshatriya race twenty-one times.
7. The object of Rama Avatara was to destroy the wicked Ravana.



8. The object of Sri Krishna Avatara was to destroy Kamsa and other demons, to deliver His wonderful message of the Gita in the Mahabharata war, and to become the centre of the Bhakti schools of India.
9. The object of Buddha Avatara was to prohibit animal sacrifices and teach piety.
10. The object of the Kalki Avatara is the destruction of the wicked and the re-establishment of virtue.

Lord Siva incarnated himself in the form of Dakshinamurti to impart knowledge to the Four Kumaras. He took human form to initiate Sambandhar, Manikkavasagar, Pattinathar. He appeared in flesh and blood to help his devotees and relieve their sufferings. The divine Lilas or sports of Lord Siva are recorded in the Tamil Puranas like Siva Purana, Periya Purana, Siva Parakramam and Tiruvilayadal Purana.






Study of the Puranas, listening to sacred recitals of scriptures, describing and expounding of the transcendent Lilas of the Blessed Lord - these form an important part of Sadhana of the Lord's devotees. Upanyasas open the springs of devotion in the hearts of hearers and develop Prema-Bhakti which confers immortality on the Jiva.
Sri Kirupaanantha Vaariyaar and Sri Velukkutty Krishnan are two of the famous people who dedicated their lives to spreading the Vedic knowledge by doing Puraana Upanyaasams.

**(To be continued)**

# திருக்குறள் கற்போம்

## கல்வி 40

## Mercy

**கற்க கசடறக் கற்பவை கற்றபின் (கல்வி 40)**
**நிற்க அதற்குத் தக**

ஒருவன் கற்கவேண்டிய நூல்களை (எண்ணும் எழுத்தும்) குற்றமறக் கற்க. கற்றால் அக் கல்விக்கேற்ப நடக்க.
Let a man learn thoroughly whatever he may learn, and let his conduct be worthy of his learning

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு**

எண் என்று சொல்வனவும் எழுத்தென்று சொல்வனவும் ஆகிய இவ்விருவகைக் கல்வியும் உயிர்வாழும் மக்களுக்குக் கண் என்று சொல்லுவார்கள்.
Letters and numbers are the two eyes of a man

**கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்**

கண் உடையவர் என்று உயர்த்திச் சொல்லப்படுபவர் கற்றவரே! மற்றைக் கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்ணுடையவரே அன்றிக் கண்ணுடையவர் அல்லர்.
The learned are said to have eyes, but the unlearned have (merely) two sores in their face

**உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்**

மகிழுமாறு மனங்கலந்து பழகி அடுத்து எப்பொழுது கூடி மகிழ்வோம் என நினையுமாறு வருந்திப் பிரிதலாகிய அவ்வளவே புலவர் தொழில்
It is the part of the learned to give joy to those whom they meet, and on leaving, to make them think, “Oh, when shall we meet them again!”

**உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றா**
**கடையரே கல்லா தவர்**

செல்வர் முன் ஏழைபோல ஆசிரியர் முன் ஏங்கித் தாழ்ந்து நின்று கற்றவரே உயர்ந்தவர். அம்முறைப்படி கல்லாதவர் இழிந்தவரே.
The unlearned are inferior to the learned, before whom they stand begging, as the destitute before the wealthy

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு**

மணலிற் தோண்டிய கிணறு தோண்டிய அளவுக்கேற்ப நீர் ஊறும். அதுபோல மக்களுக்கு கற்ற கல்வியின் அளவுக்கு ஏற்ப அறிவு பெருகும்.
Water will flow from a well in the sand in proportion to the depth to which it is dug, and knowledge will flow from a man in proportion to his learning

**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையுங் கல்லாத வாறு**

கற்றவனுக்குத் தன் நாடும் தன் ஊரும்போல எந்த நாடும் எந்த ஊரும் சொந்தமாகி விடும். ஆகவே ஒருவன் சாகும்வரையும் கல்லாதிருப்பது என்ன கருதியோ?
How is it that anyone can remain without learning, even until his death, when (to the learned man) every country is his own (country) and every town is his own (town)

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து**

ஒரு பிறவியில் தான் கற்ற கல்வி ஒருவனுக்கு ஏழு பிறப்பிலும் தொடர்ந்து உதவும்
The learning which a man has aquired in one birth will yield him pleasure during seven birhths

**தாமின் புறுவது உலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்**

தாம் இன்பமடைதற்குக் காரணமான கல்வியை உலகோர் கேட்டு இன்புறுதல் கண்டு கற்றறிந்த மேலோர் அக்கல்வியை மேலும் விரும்புவர்.
The learned will long (for more learning), when they see that while it gives pleasure to themselves, the world also derives pleasure from it

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு**
**மாடல்ல மற்றை யவை**

ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வி ஒன்றேயாம். மற்றைய பொன் , பொருள் போன்றவை எல்லாம் ஒருவனுக்கு நிலைத்த செல்வமல்ல.
Learning is the true imperishable riches; all other things are not riches

தமிழ்: முனைவர் இரா சாரங்கபாணி **English: Rev Drew & John Lazarus**


SHARON
Importers, Wholesalers, Distributor & Retailers
Specialist in: Srilankan and Indian Products
Fresh Fruits
Vegetables
Fish
Groceries
Off Licence
Food Products
311-313 Mitcham Road, Tooting, London SW17 9JQ
T: 020 8672 9353
F: 020 8672 6353
E: sharonsfood@aol.com

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD




# WESTERN

JEWELLERS

*Jewellers & Gem Merchants*

230,UPPER TOOTING ROAD
LONDON SW17 7EW
**PHONE : 020 8767 3445**

## SILK EMPORIUM

122 UPPER TOOTING ROAD LONDON SW17 7EN
**PHONE : 020 8672 1900**

# WESTERN

## JEWELLERS & TEXTILES

5, PLAZA PARADE, 29-33, EALING ROAD,
WEMBLEY, MIDDLESEX HA0 4YA.
**PHONE : 020 8903 0909**





**OPENNING HOURS**
**Monday to Saturday**
**10.00am - 6.30pm**
**Sunday 11.00am - 5.30pm**


71


இலண்டனில் வாசன் அச்சகத்தினரால் (தொலைபேசி:020 8685 9203) வடிவமைத்து, அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 15-01-2012 அன்று வெளியிடப்படுகிறது.